S.டேனியல் சம்பத் குமார்
எண் 147, திருநிலை காலனி ,
விச்சூர் போஸ்ட்,
சென்னை – 600 103




*for books contact :*

**S.DANIEL SAMPATH KUMAR**
*No. 147, Thirunilai colony ,*
*vichoor post , chennai - 600 103*
*E-Mail : sdanielsampathkumar@gmail.com*
*Website : danielendtimebooksministry.org*
*Phone No :* 99419 74213 , 96001 71260

TAMIL

# *The Spoken Word*

*by*

*WILLIAM MARRION BRANHAM*

# சுவிசேஷம் என்றால் என்ன?

**ஏழாம் தூதன்**

**வில்லியம் மரியன் பிரன்ஹாம்**

**“உரைக்கப்பட்ட வார்த்தையே மூல வித்து”**

''அந்தப் பட்டணத்தார் (பெரோயா பட்டணத்தார்) மனோவாஞ்சையாய் வசனத்தை ஏற்றுக்கொண்டு காரியங்கள் இப்படி இருக்கிறதா என்று தினந்தோறும் வேத வாக்கியங்களை ஆராய்ந்து பார்த்ததினால், தெசலோனிக்கேயில் உள்ளவர்களைப் பார்க்கிலும் நற்குண சாலிகளாயிருந்தார்கள். அதனால் அவர்களில் அநேகம் பேரும் கனம் பொருந்திய கிரேக்கரில் அநேக ஸ்திரீகளும் புருஷர்களும் விசுவாசித்தார்கள்'' (அப்போஸ்தலர் 17: 11-12.)

இந்தக் கைப்பிரதியை வாசிப்பவர்களும் மனோ வாஞ்சையாய் வசனத்தை ஏற்றுக்கொண்டு காரியங்கள் இப்படி இருக்கிறதா என்று வேத வாக்கியங்களை ஆராய்ந்து பார்க்க வேண்டிக்கொள்ளப்படுகிறார்கள்.

பெற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்! அப். 2:38

114 இது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின கட்டளையும் அதிாரமும் வாக்குத்தத்தமுமாயிருக்கிறது. இது எல்லா காலத்துக்கும், எல்லா விசுவாசிகளுக்கும், விசுவாசிகளின் சபைகளுக்கும் தேவன் கொடுத்த வகக்குத்தத்தம்.

115 வார்த்தையை உங்கள் வாழ்க்கையில் ஒருபோதும் ஆராயாத அளவுக்கு ஆராய்ந்து பாருங்கள். நாமெல்லாரும் அடுத்த உலகத்துக்குப் பிரயாணப்படுகையில் தடை ஒன்றும் இருக்கக்கூடாது. டிக்கெட் நமது கையில் இருக்க வேண்டும். தடை ஏதெனும் இருக்குமானால் அதை இப்பொழுதே அகற்ற வேண்டும். பாரம்பரிய புளித்த மாவு போதனைகளே நமக்குத் தடையாக உள்ளன. வார்த்தையின் மேல் நமது விசுவாசத்தை அஸ்திபாரப்படுத்தினால் எல்லாத் தடைகளும் அகன்றுபோகும். பரிசுத்த வேதாகமத்துக்குத் திரும்பி வாருங்கள்!

116 மனித சத்தங்களைக் கேட்டு ஏமாந்து போகாதீர்கள்! நம்முடைய நல்ல மேய்ப்பனாகிய இயேசு கிறிஸ்துவின் சத்தத்தை வேதாகமத்திலிருந்து கேட்டு, அவருடைய வாாத்தைக்குக் கீழ்ப்படிந்து தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசியுங்கள்!

117 ''நீங்கள் கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்கள்; மனுஷருக்கு அடிமைகளாகதிருங்கள்''! 1 கொரி 7:32.

# சுவிசேஷம் என்றால் என்ன?

1. சுவிசேஷம் என்னும் வார்த்தைக்கு நற்செய்தி என்று பொருள். கிறிஸ்தவ வேத புத்தகத்தில் தேவனுடைய ராஜ்யத்தின் சுவிசேஷம் என்றும், இயேசு கிறிஸ்துவினுடைய சுவிசேஷம் என்றும் எழுதப்பட்டு உள்ளது. இதைத் தேவ தூதர்கள் எல்லா ஜாதிகளுக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தி என்று அறிவித்தனர். முதலாவது தேவனுடைய ராஜ்யத்தின் சுவிசேஷம் என்ன என்பதைக் காண்போம்.

## தேவனுடைய ராஜ்யத்தின் சுவிசேஷம்

2. இந்த நற்செய்தியை இயேசுவே உலகத்தில் பிரசங்கித்தார். அவர், ''காலம் நிறைவேறிற்று, தேவனுடைய ராஜ்யம் சமீபமாயிற்று, மனந்திரும்பி, சுவிசேஷத்தை விசுவாசியுங்கள்'' என்றார் (மாற்கு 1:15) அதாவது மானிட ராஜ்யம் முடிவடையும் என்றும் தேவனுடைய ராஜ்யம் உலகத்துக்கு வர சமயமாகிவிட்டது என்றும் அறிவித்து, நாம் மனந்திரும்ப வேண்டும் என்றும் சுவிசேஷத்தை விசுவாசிக்க வேண்டுமென்றும் கூறினார். ஆனால் தேவனுடைய ராஜ்யம் வருவதனால் நமக்கு என்னபயன்?

3. மானிட ஆட்சியிலே நாம் அனுபவிப்பது என்ன? பசி, பட்டினி, நிர்வாணம், நோய், துக்கம், துன்பம், கண்ணீர், ஏமாற்றம், மரணம் முதலியனதான். ஆனால் இந்த உலகத்தைத் தேவனே ஆளுகை செய்வாரானால், அவருடைய ராஜ்யத்தில் இத்தகைய உபத்திரவங்கள் இருக்காது. உலக துன்பங்களிலிருந்தும், வியாகுலங்களிலிருந்தும் விடுதலையடைந்து, நம்முடைய பாவங்கள் தீர்ந்து, அவருடைய ராஜ்யத்தில் சந்தோஷமாய் இருக்கலாம். அங்கே நோயும் மரணமும் இல்லாததனால் மருத்துவ மனையும் சுடுகாடும் இருக்காது! நம்மை சந்தோஷமாய் இருக்க வைத்து மரணமில்லா வாழ்வைத் தருவதே இந்த நற்செய்தியை அளித்தவரின் கருத்து. ஆனால் வரப்போகும் அந்த ராஜ்யத்தில் யார் யார் இருப்பார்கள்?

4. அந்த ராஜ்யத்தில் நாமெல்லாரும் இருக்கலாம்! இது தான் அந்த நற்செய்தி ! ஒருவன் யாராயிருந்தாலும் சரி, எந்த ஜாதியாயிருந்தாலும் சரி, எந்த பாஷைக்காரனாயிருந்தாலும் சரி, படித்தவனும் படிக்காதவனும், ஏழையும் குபேரனும் ஒன்றுபட்டு அந்த இராஜ்யத்தில் பிரவேசிக்கலாம்! இது உயர்வான வாழ்க்கையைத் தந்து மகிழ்ச்சியை அளிக்கும் சுவிசேஷமல்லவா? ஆனால்

அந்த ராஜ்யத்தில் பிரவேசிப்பது எப்படி? [illegible] கிறிஸ்துவின் வார்த்தைகளின்படி முதலாவது நாம் மனந்திரும்ப வேண்டும்.

5. மனந்திரும்புவது எப்படி?

6. தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க விரும்புகிறவன் தன் மனத்தை பாவ செயல்களிலிருந்து திருப்பி பாவஞ்செய்வதை விட்டுவிடவேண்டும். துரோகம் செய்யக்கூடாது. தான் வளர்க்கப் பட்ட பரம்பரை வழக்கத்திலிருந்து மனதைத் திருப்பவேண்டும். ஜோஷியம் பார்க்கக்கூடாது. குறிவைக்கக்கூடாது. சூன்யம் பண்ணக்கூடாது. மந்திரம் மாயம் பண்ணக்கூடாது. சிருஷ்டிக்கப் பட்டவைகளை வணங்கக்கூடாது. அசுத்த ஆவிகளையும் மனிதனையும் தேவன் என்று நினைத்து கும்பிடக்கூடாது. எல்லாத் துதியையும் கனத்தையும் மகிமையையும் அகிலத்தைப் படைத்து ஆண்டுவரும் இறைவனுக்கே கொடுக்கவேண்டும். தன் மனதை முழுதுமாக உலகக் காரியங்களில் இருந்து திருப்பி தேவனிடம் செலுத்த வேண்டும். இப்பேர்ப்பட்ட மனந்திரும்புதலை தான் கிறிஸ்துகுறிப்பிட்டார்! இவ்வண்ணம் மனந்திரும்பாதவன் பரலோக ராஜ்யத்துக்குப் பங்காளியாவதில்லை!

(7) மனந்திரும்பினபின் தேவனுடைய ராஜ்யம் உலகத்துக்கு வருகிறது என்ற நற்செய்தியை முழு நிச்சயத்துடன் விசுவாசிக்க வேண்டும்.

8. ஆக, தேவனுடைய ராஜ்யம் வரும்போது நாம் அந்த ராஜ்யத்தில் பிரவேசிப்பது எப்படி? ராஜ்யத்தில் பிரவேசிப்பதற்கு இரண்டு நிபந்தனைகள் உள்ளன. அவைகளை இயேசுவே சொல்லக்கேட்போம்: ''ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்'' என்றார் (யோவான் 3:5). ஆனால் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறப்பது எப்படி? இது எப்படி என்பதை அறிய நாம் ''இயேசு கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தை'' அறிதல் அவசியம்.

## இயேசு கிறிஸ்துவினுடைய சுவிசேஷம்

9. இயேசு கிறிஸ்து யார்? அவருடைய சுவிசேஷம் என்ன? இயேசுகிறிஸ்து இறைவனுடைய குமாரன். புருஷனுடையதொடர்பின்றி ஸ்திரீயிலே உற்பத்தியானவர். இறைவன் உலகத்தினுடைய பாவத்தைப்போக்கி ஆத்துமா சாகாமையை மனிதருக்கு அளிக்க இவரை பலிகொடுக்க மனிதனாய் அனுப்பினார். இவர் உலகத்தில் பிறக்குமுன், இவர் மனிதருடைய பாவத்துக்காக ஆட்



போதிக்கிறவர்களும் இததகைய போதனையை நம்புகிறவர்களும் தங்களைக் கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக்கொள்வதென்ன?

109 நீங்கள் தேவனுடைய ராஜ்யத்துக்கென்று முன் குறிக்கப் பட்ட எபே 1:4-5 ராஜரீக வித்துக்களானால், தேவனுடைய ஆவியின் அபிஷேகத்துக்கு எதிர்ப்பு காட்டமாட்டீர்கள். இந்த உலகிற்கு வயது முடிந்துவிட்டது. இனி காலம் செல்லாது. மனந் திரும்புங்கள்? பாவ மன்னிப்புக்கென்று கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள்! பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானமும் பெற்றுக்கொள்ளுங்கள். இயேசுவை விழித்திருந்து காத்துக் கொண்டிருங்கள்! அவர் சீக்கிரமாய் வருகிறார். உங்கள் கண்கள் அவரைக் காணும்!

### ஞானஸ்நானத் திறவுகோல்களின் சுருக்கம்

110 இயேசு பரலோக ராஜ்யத்தின் திறவுகோல்களை பேதுருவினிடம் கொடுத்து மத் 16:19, ஜனங்களை ராஜ்யத்துக்கு அழைக்கும் அதிகாரத்தை எல்லா சீஷர்களுக்கும் கொடுத்தார் மத் 28:19 பெந்தெகோஸ்தே என்னும் நாளிலே பேதுரு பரலோக ராஜ்யத்தைத் திறந்து வைத்தான்

அப் 2:38 41.

111 தண்ணீரினாலும் ஆவியினாலும் பிறந்தவர்கள் மாத்திரமே தேவனுடைய ராஜ்யத்தைக் காணக்கூடும். அதனுட் பிரவேசிக்கக் கூடும் என்றார் இயேசு யோவான் 3:3-5. தண்ணீரினால் கொடுக்கப்படும் ஞானஸ்நானம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினல் மாத்திரமே கொடுக்கப்பட வேண்டும். ஞானஸ்நானத்துக்கு வருபவரை அடக்கம் பண்ணுவது போல கிறிஸ்துவின் மரணத்துக்குள் அடக்கம் பண்ணப்பட்டதன் சாயலில் முகம்மேல் பக்கமும் முதுகு தண்ணீர் பக்கமுமாக முழுக வைக்க வேண்டும் ஒரே தடவை மூழ்க வைக்க வேண்டும். ஒரே தடவை மூழ்க வைக்க வேண்டும். பின்னர் பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பெறவேண்டும்.

112 இயேசு ஒவ்வொரு சபைக்கும் வெவ்வேறு ஞானஸ்நானத்தைக் கற்பிக்கவில்லை. அப்போஸ்தலர்கள் கொடுத்த ஞானஸ்நானமே மெய்யான ஞானஸ்நானம் இதற்கு தர்க்கம் செய்வது பிசாசினால் உண்டாயிருக்கிறது.

113 தேவனுடைய ராஜ்யம் சமீபமாயிருக்கிறது! உங்களுடைய நித்திய ஜீவனை மனித உபதேசத்தின் மேலும் பாரம்பரை புளித்தமாவு சபை போதகத்தின் மேலும் அஸ்திபாரப்படுத்தாதீர்கள்! ''நீங்கள் மனந்திரும்பி ஒவ்வொருவரும் பாவ மன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம்

பெற்று, தங்களைப் பரிசுத்த ஆவிக்கு நிபந்தனையின்றி ஒப்புக் கொடுப்பீர்களானால், நீங்கள் பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பெறுவீர்கள். பரிசுத்த ஆவி உங்கள்மேல் வந்தால் நீங்கள் ஒரு வேளை ''புறாவைப் போல புலம்பலாம்'' அல்லது ''குருவியைப்போல் கூவலாம்'' ஏசா 38:14. அல்லது ''பரியாச உதடுகளினாலும், அந்நிய பாஷைகளினாலும் பேசலாம்'' ஏசா 28:11. அல்லது ''நடுங்கலாம்'' ஆபகூக் 3:16. அல்லது ''கைக் கொட்டி ஆர்ப்பரிக்கலாம்'' சங் 47:1. அல்லது ''பாடலாம்'' சங் 66:1 அல்லது 'துயரப்படலாம், துக்கிக்கலாம், சஞ்சலப் படலாம்' யாக் 4:9. அல்லது ''தவிக்கலாம்'' ரோமர் 8:23.

106 ஆனால் இது உங்களுக்குக் கேலியாக இருக்குமானால், நீங்கள் ஜென்ம சுபாவமான மனுஷர்களாயிருக்கிறீர்கள்! மறு பிறப்பு பிறக்காதவர்களாயிருக்கிறீர்கள்! பரலோக ராஜ்யம் உங்கள் நடுவில் இருப்பதைக் காணக்கூடாதவர்களாயிருக்கிறீர்கள்! நீங்கள் மேட்டிமை கொண்ட நிக்கோதேமுவின் சொந்த ஞானத்தின் சந்ததிகளாயிருக்கிறீர்கள் யோவான் 3:4. நீங்கள் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க மாட்டீர்கள் என்று இயேசு மெய்யாகவே மெய்யாகவே உங்களிடம் கூறுகின்றார்!
யோவான் 3:5, 9-12.

107 சிலர் ''பரிசுத்த ஆவிக்குப் பதிலாக அசுத்த ஆவி கிடைத்து விட்டால் என்ன செய்வது?'' என்கிறார்கள் பரிசுத்த ஆவியைப் பெறாமலேயே நாங்கள் மறுபிறப்பு பிறந்து விட்டோம் என்று சொல்லி சபைக் கைதிகளாய் இருக்கும் சகோதர சபை ஸ்தாபனத்தார் கேட்கும் கேள்வி இது இப்பேர்ப்பட்ட பயம் பிசாசினால் உண்டாயிருக்கிறது. உங்கள் பிள்ளைகள் மீனைக் கேட்டால் பாம்பையும் அப்பத்தைக் கேட்டால் கல்லையும் நீங்கள் கொடுப்பீர்களானாலும் பரலோகத்திலிருக்கிற பிதா தம்முடைய பிள்ளைகளுக்குப் பரிசுத்த ஆவியை மாத்திரமே கொடுப்பார்! லூக்கா 11:9-13 லூக்கா 11:10-ல் இயேசு, கேட்கிறவன் எவனும் நீங்களும் கூட பெற்றுக்கொள்கிறான்'' என்றார். பரிசுத்த ஆவியை அவரிடம் கேட்டு பெற்றுக் கொள்ளுங்கள். மணவாளன் உட்பிரவேசித்தப் பிறகு, எண்ணெய் வாங்கச் சென்றிருந்தவர்கள் வந்து கதவு அடைக்கப்பட்டு இருக்கக் கண்டார்களே! மத் 25:1 -9. அது உங்களுக்கு பயங்கரமான ஞாயத் தீர்ப்பாயிருக்கும்'

108 இன்னும் கவனி! ''கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவனல்ல''! என்கிறான் பவுல் ரோமர் 8:9.. இன்னும் தெளிவாக, கிறிஸ்துவின் ஆவியற்றவன் கிறிஸ்தவனல்ல! இது இப்படி [illegible] ஆவியின் ஞானஸ்நானம் இல்லை என்று



டுக்குட்டியாய் பலியாவார் என்று அறிவிக்க ஒரு முன் தூதன் தேவனால் அனுப்பப்பட்டான். அவன் யோவான்ஸ்நானகன்என்று அழைக்கப்பட்டான். இவன் இயேசுவைக் கண்டு, ''இதோ உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி'' என்று சுட்டிக்காட்டினான் (யோவான் 1:29-34).

10. பல்வேறு பலிகளைப் பற்றி கிறிஸ்தவ வேத புத்தகத்திலுள்ள லேவியராகமம் என்னும் பாகத்தின் முதல் எழு அதிகாரங்களில் தெளிவாக எழுதப்பட்டுள்ளது. இவ்வளவு தெளிவாக வேறெந்த புத்தகத்திலும் எழுதப்படவில்லை. பண்டைய காலத்திலே பாவமன்னிப்பைப் பெற காளைகளையும் ஆடுகளையும் புறாக்களையும் தேவனுக்குப் பலி செலுத்தினர். மிருகங்களின் இரத்தம் பாவங்களை மூடினது. இங்கே குறிப்பிடப்பட்டிருக்கும் பலிகள் இயேசுகிறிஸ்து தாமே பலியாகி மனிதனை பாவக் கட்டுகளிலிருந்து விடுவிப்பதின் சாயலாயிருந்தன. ஏற்றக்காலத்தில் இறைவன் தமது குமாரனை உலகத்துக்கு அனுப்பி உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கும் ஒரு தூய பலியாக்கினார். இறைவன் மனிதனை நேசித்ததாலே இப்படி செய்தார். இயேசு பலியானார். பாவியாகிய எவனும் இயேசு தன் பாவங்களுக்காகப் பலியானார் என்று விசுவாசித்து, தன் பாவங்களை கிறிஸ்துவினிடம் அறிக்கை செய்து, பாவஞ்செய்வதை விட்டுவிடுகிறானோ, அவனுடையப் பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன.

11. அன்னதானத்தினாலல்ல, நல்ல கர்மத்தினாலல்ல. நல்லொழுக்கத்தினாலல்ல, தேவனை வழிபடுவதினாலல்ல, சடங்காச்சாரங்களைச் செய்வதினாலல்ல, பொருத்தனைகளை நிறைவேற்றுவதினாலல்ல. காணிக்கைச் செலுத்துவதினாலல்ல—என் பாவங்களுக்காக இயேசு பலியானார், அவர் சிந்தின இரத்தத்தின் மூலம் எனக்குப் பாவமன்னிப்பு கிடைக்கிறது என்று விசுவாசிப்பதினால் மாத்திரமே பாவமன்னிப்பின் நிச்சயத்தையும் விடுதலையையும் பெறுகிறோம்! இயேசுவின் இரத்தபலியின் மூலம் பாவத்திலிருந்து விடுதலையாகலாம் என்பதே அந்த நற்செய்தி! எல்லா ஜாதிகளுக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தி இதுவே!

12. பாவ மன்னிப்பையும் — ஆத்துமா— சாகாமையையும் இறைவன் எளிய வழியில் உறுதிபடுத்தி இருப்பதானால், ஞானிகளும் கல்விமான்களும் இந்த இரட்சிப்பின் குறுகிய வழியிலே இடறி விழுகின்றனர். இதைக் குறித்து இயேசு, 'நீங்கள் மனந்திரும்பி பிள்ளைகளைப்போல் ஆகாவிட்டால், பரலோக ராஜ்யத்தில் பிர

வேசிக்கமாட்டீர்கள் என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்' என்றார் (மத்தேயு 18:3) எளிய உறுதிய இந்த வழியைக் குறித்து பின்னும் இயேசு, 'ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமாயிருக்கிறது; அதைக் கண்டுபிடிக்கிறவர்கள் சிலர்' என்று கூறினார் (மத்தேயு 7:14).

13. இறைவன் எந்த மதத்தையும் உண்டாக்கவில்லை! அவர் மதம் மாறுதலையும் சபை மாறுதலையும் போதிக்கவில்லை! அவர் மனம் மாறுதலை நமக்கு சுவிசேஷமாய் (நற்செய்தியாய்) அறிவித்தார். ஆகவே தான் இயேசு, 'மனந்திரும்பி சுவிசேஷத்தை விசுவாசியுங்கள்' என்றார் (மாற்கு 1:14-15) மதங்கள் மனிதனுடைய ஏற்பாடுகள். மனம் மாறவேண்டும் என்பது இயேசு கிறிஸ்து தந்திருக்கும் புதிய ஏற்பாடு! மதவாதிகளும் சபைவாதிகளும் மனந்திரும்புவதுமில்லை, பாவமன்னிப்பைப் பெறுவதும் இல்லை! இவர்கள் பரலோக ராஜ்யத்தில் பிரவேசிப்பதுமில்லை!!

14. எத்தனையோ கிறிஸ்தவர்கள் மனந்திரும்பாமல் ஞானஸ்நானம்எடுத்தும், எகிப்துதேசத்திலிருந்து புறப்பட்ட இஸ்ரவேலர் செங்கடலைக் கடந்தும் பின்னோக்கி நாங்கள் எகிப்து தேசத்திலே நலமுடன் இருந்தோமே என்று முறுமுறுத்ததுபோல, தங்கள் பாவங்களுக்குத் திரும்பச் செல்கிறார்கள்! கிருபையில் வளரமுடியாமல் சடங்காச்சார பாரம்பரியத்தில் சிக்கி குறுகின வாசலைக் காணக்கூடாமல் இருக்கிறார்கள். தேவனுடைய கிருபை இன்றைக்கும் நமக்கிருப்பதனால், மனந்திரும்ப இன்றைக்கும் அப்பேர்ப்பட்ட கிறிஸ்தவர்களுக்கு வாப்பு கிறிஸ்துவில் உள்ளது.

15. மதங்களிலும் உலக ஞானக் கட்டுகளிலும் சிக்கிக் கிடக்கிறவர்களும், எளிமையில் உபதேசிக்கப்படும் மனந்திரும்புதலை ஏற்றுக்கொள்வதில்லை. இப்பேர்ப்பட்டவர்கள் அசுத்த ஆவிகளினால் சிறைப்பட்டு விடுவித்துக்கொள்ளத் திராணியின்றி இருக்கின்றனர். குலதெய்வக் கட்டுகளும், மதபோதகம் தந்த காயங்களால் துன்பப்படுகிறவர்களும் கிறிஸ்துவின் எளிய போதனையை ஏற்றுக்கொண்டு குணப்படக்கூடாமல் திகைக்கின்றனர். ஏழைகள் தங்கள் எஜமான்களின் தெய்வங்களை சூழ்நிலையின் காரணத்தால் ஏற்றுக்கொண்டு திணருகின்றனர். நமக்கு ஒரு நல்ல காலம் வருமா, நாம் உயர்த்தப்படுவோமா என்று ஏங்குகின்றனர். இப்பேர்பட்ட ஜனத்துக்கு மிக்க மகிழ்ச்சியளிக்கும் நற்செய்தி ஒன்று உண்டு!

16. இயேசு கிறிஸ்து சிறுமைப்பட்டவர்களுக்குச் சுவிசேஷமாகிய உயர்த்தப்படுதலை சுவிசேஷமாய் அறிவிக்கிறார். இருதயம் நொருங்குண்டவர்களின் காயங்களைக் கட்டுகிறார். (பிசாசினி



பைத்தியமாகத் தோன்றும்; அவைகள் ஆவிக்கேற்ற பிரகாரமாய் ஆராய்ந்து நிதானிக்கப்படுகிறவைகளானதால், அவைகளை அறியவும் மாட்டான்'' 1 கொரி 2:14 உங்கள் சுபாவங்களை இந்த வசனக் கண்ணாயில் பார்த்துக் கண்டு கொள்ளுங்கள். அவர் சீக்கிரமாய் வருகிறார்!

101 சீஷர்களும் மற்ற விசுவாசிகளுமாகிய 120 பேர் எருசலேமிலே காத்திருந்து பரிசுத்த ஆவியைப் பெற்றார்கள் (அப் 2:14, சமாரியர் விசுவாசித்து பேதுருவும் யோவானும் அவர்கள் மேல் கைகளை வைத்து ஜெபிக்க, அவர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றார்கள் அப் 8:12-17 கொர்நெலியுவின் வீட்டார் வசனத்தைக் கேட்டு விசுவாசித்தபோது பரிசுத்த ஆவியைப் பெற்றார்கள் அப் 10:44-48. எபேசிய விசுவாசிகள் வார்த்தையைக் கேட்டு விசுவாசித்தபோது பரிசுத்த ஆவியைப் பெற்றார்கள் அப். 19:1 17 இன்றைக்கும் வார்த்தையைக் கேட்டு சந்தோஷமாய் ஏற்றுக் கொள்கிறவர்கள் பரிசுத்த ஆவியைப் பெறுகிறார்கள் ஏன் தேவனுடைய ராஜ்யத்துக்கு உங்களைப் பங்காளிகளாக்கும் இந்த பரிசுத்த ஆவி உங்களுக்கு வேண்டாமா?

102 சிலர் ''பரிசுத்த ஆவியின் கூட்டத்தார் அந்நிய பாஷைகளைப் பேசி கைகொட்டி சத்தமிடுகிறார்களே'' என்று நினைக்கலாம் உங்களுக்கு அது ஒரு ஒழுக்கங்கெட்ட காரியமாய் காணப்படலாம். ஆனால் கவனி!

103 அதிக வசனிப்பினால் ஜெபம் செய்யக்கூடாது என்று தான் கிறிஸ்து கூறினார் மத் 6:7. ஆனால் அவர் துதிக்கவும் மகிமைப்படுத்தவும் கூடாது என்று போதிக்கவில்லை? இரவு பகலாய் துதிக்கிறவர்களை வெளி 4:10-ல் பாருங்கள் புதிய ஏற்பாட்டின் ஜனங்களுக்கு முதன் முதல் பரிசுத்த ஆவி அளிக்கப்பட்டபோது அவர்கள் எப்படி காணப்பட்டார்கள்? அவர்கள் குடித்து வெறிகொண்டவர்களைப் போல் காணப்பட்டார்கள்! அப் 2:13-15. ஆனால் இன்று அதை நீங்கள் வெறுப்புடன் பார்ப்பது என்ன?

104 பரிசுத்த ஆவியைப் பெற்றவர்கள் ''வெவ்வேறு பாஷைகளிலும்'' அப் 1:4, ''பல பாஷைகளிலும்'' அப் 10:45, ''அந்நிய பாஷைகளிலும்'' அப் 19:6 பேசினார்களே! பரிசுத்த ஆவி வரும்போது எல்லா காலங்களிலும் இப்படித்தான் நடந்து வருகிறது. இதைக் குறித்து வெட்கப்படுவீர்களானால், நியாயத் தீர்ப்பிலே அவர் உங்களைக் குறித்து வெட்கப்படுவார் அல்லவா? மாற்கு 8:38.

105 நீங்கள் மனந்திரும்பி ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம்

பாரம்பரிய ஞானஸ்நானங்களை விட்டு கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தின்மேல் கட்டப்பட்டிருக்கும் ஞானஸ்நானத்துக்குத் திரும்பின ஜனங்களைக் காண்பாரா?

## எல்லாரும் ஆவியினாலே ஒரே சரீரத்துக்குள்ளாகப் பிறந்திருத்தல் 1 கொரி 12:13

97 இது பேதுரு உபயோகித்த இரண்டாம் திறவுகோல் அதாவது தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க வேண்டுமானால், ஆவியிலும் பிறந்திருக்க வேண்டும் (யோவான் 3:5). யோவான் ஸ்நானகன், ''.. எனக்குப் பின் வருகிறவரோ என்னிலும் வல்லவராயிருக்கிறார்...அவர் பரிசுத்த ஆவியினாலும் அக்கினியினாலும் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பார். தூற்றுக்கூடை அவர் கையில் இருக்கிறது; அவர் தமது களத்தை நன்றாய் விளக்கி, தமது கோதுமையைக் களஞ்சியத்தில் சேர்ப்பார்; பதரையோ அவியாத அக்கினியினால் சுட்டெரிப்பார்'' என்றான் மத். 3:11, 12).

98 மேற்கூறப்பட்டுள்ள வசனங்கள் பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் இல்லை என்றா கூறுகின்றன? தேவனுடைய வார்த்தை கூறுவதே சரி. பரிசுத்த ஆவியைப் பெறாதவன் பரலோக ராஜ்யத்தில் பிரவேசிப்பதில்லை! அப்படியானால் பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் இல்லை என்று சாதிக்கிறவன் யாராய் இருக்க வேண்டும்? இயேசு என்றும் மாறாதவர் (எபி. 13:8). அவருடைய வசனம் என்றும் ஒழியாதது மத். 24:35. அவர் அன்று ஆவியினாலும் அக்கினியினாலும் ஞானஸ்நானம் கொடுத்தது உண்மையானால், அவர் இன்றைக்கும் அப்படியே செய்கிறார். இயேசுவை இரட்சகர் என்று ஏற்றுக் கொள்ளாதவர்கள் எப்படி பாவத்தில் நிலைக்கொண்டிருக்கிறார்களோ அப்படியே, பரிசுத்த ஆவியை ஏற்றுக்கொள்ளாதவர்களின் பாவம், ஏற்றுக்கொள்ளாத பாவம் இம்மையிலும் மறுமையிலும் மன்னிக்கப்படுவதில்லை! மத். 12:31-32

99 நமக்காக மரித்த இயேசுவின் மரணத்தில் பங்கெடுக்க வைக்கும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் ஞானஸ்நானம் வேண்டாம், பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானமும் வேண்டாம் என்றால், உங்களுக்கு வரப்போகும் தேவனுடைய ராஜ்யத்தில் இடமும் வேண்டாம் என்று பொருள். முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அதன் நீதியையும் தேட வேண்டாமா? தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கும் நிபந்தனைகளை நிறைவேற்றாமல் ''உம்முடைய ராஜ்யம் வருவதாக'' என்று ஜெபித்து என்ன பயன்?

100 ''ஜென்ம சுபாவமான மனுஷனோ தேவனுடைய ஆவிக்குரியவைகளை ஏற்றுக் கொள்ளான்; அவைகள் அவனுக்குப்



டம்) சிறைப்பட்டவர்களுக்கு விடுதலை அளிக்கிறார். கட்டுண்டவர்களை விடுவிக்கிறார். இதற்காகவே இயேசு கிறிஸ்து ஆவியின் அபிஷேகத்தைப் பெற்றார் (ஏசாயா 61:1 லூக்கா 4:18) சாம்பலை பூசிக்கொள்பவர்களே, கேளுங்கள்! அவர் சாம்பலுக்குப் பதிலாகச் சிங்காரத்தை அளிக்கிறார். துயரத்துக்குப் பதிலாக ஆனந்த தைலத்தை அளிக்கிறார்! ஒடுங்கினவர்களைத் துதிபாட வைக்கிறார்! அப்போது மனந்திரும்பினவர்கள் தேவனுடைய மகிமைக்கென்று நாட்டின நீதியின் விருட்சங்களாயிருப்பார்களாம்! (ஏசாயா 61:3)

17. இதை அவர் எப்படிச் செய்கிறார்? கர்த்தர் கூறுவதை கவனி: 'உங்களுக்கு நவமான இருதயத்தைக் கொடுத்து, உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியைக் கட்டளையிட்டு, கல்லான இருதயத்தை உங்கள் மாம்சத்திலிருந்து எடுத்துப்போட்டு, சதையான இருதயத்தை உங்களுக்குக் கொடுப்பேன். உங்கள் உள்ளத்திலே என் ஆவியை வைத்து, உங்களை என் கட்டளைகளில் நடக்கவும் என் நியாயங்களைக் கைக்கொள்ளவும் அவைகளின் படி செய்யவும் பண்ணுவேன்' (எசேக்கியேல் 36:26—27) இது இயேசுவே கூறும் தம்முடைய நற்செய்தி!

18. அவர் உங்கள் இருதயங்களையும் ஆவியையும் மாற்றி மனந்திரும்ப வைக்கிறார்! மனம் மாற மனமுண்டானால் அவர் மீதி காரியங்களை கவனித்துக் கொள்கிறார்!

19. தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க விரும்புகிறவன் இவ்வண்ணம் மனந்திரும்பினப்பின், தண்ணீரினாலும், ஆவியினாலும் பிறக்க வேண்டியவனாயிருக்கிறான் (யோவான் 3:5)

## ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறப்பது எப்படி?

20. உலக வழிபாடுகளிலிருந்தும் பாவங்களிலிருந்தும் தன் மனதை முழுதுமாக தேவனிடத்துக்குத் திருப்பினவன் உலகத்துக்கு மரித்தவனாயிருக்கிறான். ஒரு மனிதன் மரித்தால் அவன் திரும்பி உயிர்பிழைப்பது இல்லை. பாவி ஒருவன் மரித்தால், அவன் திரும்ப உலகத்துக்கு வந்து செய்த பாவத்தைத் திரும்பச் செய்வதில்லை. இவ்வண்ணமே உலகத்திலிருந்து மனந்திரும்பினவன் உலகத்துக்குத் திரும்புவது இல்லை. மனந்திரும்பினவன் உலகத்துக்கு மரித்தவனானபடியால், இவன் உலகத்தின் பாவ மன்னிப்புக்கென்று மரித்த இயேசு கிறிஸ்துவோடு அவர் கல்லறை

யிலே அடக்கம் பண்ணப்படுகிறான். இயேசுவின் கல்லறைக்குத் தண்ணீர் ஒரு மாதிரி. மனந்திரும்பினவன் கர்த்தருடைய நாமத்தைத் (பெயரை) தொழுது கொண்டு, தன் பாவம் போகக் கழுவப்பட, தண்ணீரினால் ஞானஸ்நானம் பெற்று புதிய மனிதனாய் வாழ்கிறான் (அப்போஸ்தலர் 22:16) ஆக தண்ணீரினால் பெற்றுக்கொள்ளும் ஞானஸ்நானத்துக்குத் தண்ணீரினால் பிறப்பது என்றும், ஆவியினால் பெற்றுக்கொள்ளும் ஞானஸ்நானத்துக்கு ஆவியினால் பிறப்பது என்றும் பொருள்.

21. ஞானஸ்நானம் என்றால் என்ன? ஞானஸ்நானம் என்னும் வார்த்தை இருபதங்களைக் கொண்ட ஒரு வார்த்தை. இது வடமொழிகலந்த தமிழ் வார்த்தை இது பேப்டிஸோ (BAPtIZO) என்னும் எபிரெயு வார்த்தையை முழுவதுமாக விளக்கும் தமிழ் வார்த்தை. இந்தத் தமிழ் வார்த்தையில் இரு பொருட்கள் உள்ளன:- ஞானஸ்நானம், இங்கே ஞானம் தேவ ஞானத்தைக் குறிக்கிறது. கிறிஸ்துவே தேவ பெலனும் தேவ ஞானமுமாயிருக்கிறார்! (1கொரிந்தியர் 1:24) கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டபின் (அதாவது தேவ ஞானத்தை ஏற்றுக்கொண்ட பின்) ஸ்நானத்தில் பாவங்கள் கழுவப்பட்டதன் நிச்சயத்தை பெறுவது ஞானஸ்நானமாகும். ஸ்நானம் இங்கே ஆத்தும, சரீர, சுத்திகரிப்பைக் காட்டுகிறது. ஞானம் பெற்ற ஒருவன் தண்ணீரில் மூழ்கும் போது அவன் இயேசுவோடு அவருடைய மரணத்துக்குள் அடக்கம் பண்ணப்படுகிறான். தண்ணீரை விட்டு வெளியே வரும் போது, இயேசுவோடு உயிர்த்தெழுந்ததன் நிச்சயத்தை அடைகிறான். இவன் இயேசு திரும்ப வரும்போது உயிர்த்தெழுவான்! (ரோமர் 6:3-11) இயேசுவோடு அடக்கம் பண்ணப்படாதவன் அவருடைய உயிர்த்தெழுதலிலும் பங்கடைவதில்லை!

22. மேற்கூறப்பட்டிருப்பதுபோல, தண்ணீரினால் பிறப்பதும்கூட ஞானிகளுக்கும் கல்விமான்களுக்கும் மறைக்கப்பட்டுப் பேதைகளுக்கு வெளிப்பட்டிருக்கிறது! இது எளியதோர் காரியமாயிருப்பதனால், ஞானிகளும் கல்விமான்களும் இந்த பிறப்பின் மகத்துவத்தைக் கண்டுகொள்வதில்லை. இதைக் குறித்து இயேசு 'பிதாவே! வானத்துக்கும் பூமிக்கும் ஆண்டவரே! இவைகளை நீர் ஞானிகளுக்கும் கல்விமான்களுக்கும் மறைத்து பாலகருக்கு வெளிப்படுத்தினபடியால் உம்மை ஸ்தோத்தரிக்கிறேன்: ஆம் பிதாவே இப்படிச் செய்வது உம்முடைய திருவுளத்துக்கு பிரியமாயிருந்தது' என்றார் (லூக்கா 10:21)

23. அதிகமாய் படித்து பட்டம் பெற்றவர்களும் கிறிஸ்தவ மதபோதகக் கல்லூரிகளில் வேதாகமத்தையும், மற்ற மதங்களின்



94 ''வானத்துக்கு ஏறியிறங்கினவர் யார்? ... அவருடைய நாமம் என்ன? அவர் குமாரனுடைய நாமம் என்ன? நீ அதை அறிவாயோ?'' (நீதி. 30:4). இந்த பிதாவின் நாமத்தைக் குமாரன் வெளிப்படுத்தினாராம் (யோவான் 17:6). எப்படி வெளிப்படுத்தினார்? குமாரன், ''நான் என் பிதாவின் நாமத்தில் வந்திருந்தும் நீங்கள் (பரிசேயர்கள், சதுசேயர்கள் வேதபாரகர், ஏரோதியர்கள்) என்னை ஏற்றுக்கொள்ளவில்லை'' என்றார் (யோவான் 5:43). அப்படியானால் பிதாவின் நாமம் என்ன? கர்த்தராகிய இயேசு கிறிஸ்து பிதாவின் நாமம் அல்லவா? இது இக்காலத்து ஞானிகளும் கல்விமான்களுமான பரிசேயருக்கும் சதுசேயருக்கும் பட்டதாரிகளுக்கும் விளங்குவதில்லை ஆகவே இவர்கள் இதை ஏற்றுக் கொள்வதுமில்லை. ஆகவே இவர்கள் நித்திய ஜீவனை பெறுவதுமில்லை ஏனென்றால், இவர்கள் ஒன்றான மெய்த்தேவனாகிய பிதாவையும் அவர் அனுப்பின இயேசுக் கிறிஸ்துவையும் அறியாதவர்கள் (யோவான் 17:3). இதே யோவான் கிறிஸ்துவைக் குறித்து 'இவரே மெய்யான தேவனும் நித்திய ஜீவனுமாயிருக்கிறார்'' என்றார் (1 யோவான் 5:20).

95 ஆக, பிதா குமாரன் பரிசுத்த ஆவிக்கு ஒரே ஒரு நாமம் உண்டு. இது வெளிப்பட்ட நாமம். இது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து என்ற நாமம். இந்த நாமத்திலேதான் ஞானஸ்நானம் கொடுக்க இயேசு தம்முடைய சீஷர்களுக்குக் கட்டளையிட்டார். இந்த நாமம் பெந்தெகோஸ்தே என்னும் நாளில் பரிசுத்த ஆவி வரும்வரை வெளிப்படவில்லை. சீஷர்கள் ஆவியினால் நிறைந்தவர்களாய் எழுந்து நின்றனர் பேதுரு பிரசங்கம் செய்தான். பலர் மனந்திரும்பினர். மனந்திரும்பினவர்களை நோக்கி பேதுரு ''இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள்'' என்றான். 3000 பேர் ஞானஸ்நானம் பெற்று சேர்த்துக்கொள்ளப்பட்டனர்! பேதுருவில் இருந்த பரிசுத்த ஆவி இன்று எந்த சீஷனில் இருக்கிறதோ அவன் பேதுரு கொடுத்த ஞானஸ்நானத்தையே கொடுப்பான். இது தான் ஞானஸ்நானத்தைக் குறித்த சத்தியம்

96 பாரம்பரிய போதனைகளை விட்டு பரிசுத்த வேதாகமத்துக்குத் திரும்பி வாருங்கள்! ''அப்போஸ்தலர் தீர்க்கதரிசிகள் என்பவர்களுடைய அஸ்திபாரத்தின்மேல் கட்டப்பட்டவர்களாக இருக்க'' (அப் 2.48; எபே 2:20) நீங்கள் அப்போஸ்தலர் கொடுத்த உண்மையான ஒரே முழுக்கு ஞானஸ்நானத்தைப் பெற்று வார்த்தையில் நிலைத்திருங்கள்! அவர் திரும்பி வர சமயமாகிவிட்டது! ''ஆகிலும் மனுஷகுமாரன் வரும்போது பூமியிலே விசுவாசத்தைக் காண்பாரோ''? (லூக். 18:8). கத்தோலிக்கப்

89 ''நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் (அந்த நாமத்தைக் கண்டு கொள்ளுங்கள்!) வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை!' (அப் 4:12).

90 ஆம், அந்த இரட்சிக்கும் நாமமென்ன? அந்த அதிகாரத்தோடே கட்டளையிடப்பட்ட நாமம் எது? அது கர்த்தராகிய இயேசுகிறிஸ்து என்னும் நாமமே! இதே நாமத்தில்தான் பரிசுத்த ஆவியானவரும் அனுப்பட்டு இறுக்கிறார் (யோவான் 14;26 ஆகவே வார்த்தையினாலும் கிரியையினாலும் எல்லாவற்றையும் (ஞானஸ்நானத்தையுங்கூட) கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் செய்ய வேண்டியவர்களாகிய நாம் (கொலோ 3:17 அவர் நாமத்தில் ஞானஸ்நானம் கொடுப்பதை மறந்து ''நான் உனக்கு பிதா குமாரன் பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானங் கொடுக்கிறேன்'' என்ற சுத்தோமிக்க சூத்திரத்தில் கொடுப்பது ஏன்?

91 பாருங்கள் நமக்கென்று பிறந்த பாலகன் நமக்குக் கொடுக்கப்பட்ட குமாரன் (இயேசு கிறிஸ்து) நித்திய பிதாவுமாயிநக்கிறார்! (ஏசா 9:6) பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து என்பது விளங்கிறதா?

92 நானும் என் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம்'' என்றார் இயேசு. அப்பொழுது ''யூதர்கள் மறுபடியும் அவர்மேல் கல்லெறியும்படி கல்லுகளை எடுத்துக்கொண்டார்கள்!'' (யோவான் 10:30-31) இன்றைக்கும்கூட பிதாவும் கிறிஸ்துவும் ஒன்று என்று சொன்னால் தொந்தரவு! கல்லெறியும் அதே ஆவி இன்று கிரியை செய்வதைப் பார்!

93 இன்னும் ஒரு குறிப்பு, ஏசாயா தீர்க்கதரிசியின் மூலம் உரைக்கப்பட்ட தீர்க்கதரிசனத்தின்படி (ஏசா 7 : 14) கன்னிகைக்குப் பிறந்தவருக்கு இம்மானுவேல் என்ற பெயர்தான் வைக்கப்பட்டிருக்க வேண்டும் இம்மானுவேல் என்ற வார்த்தைக்கும் தேவன் நம்மோடு இருக்கிறார் என்று பொருள் (சற்று கவனி. தேவனுடைய குமாரன் நம்மோடு இருக்கிறார் என்று பொருள் இல்லை!)- மத் 1:23 ''முந்தின மனுஷன் (ஆதாம்) பூமியிலிருந்துண்டான மண்ணானவன்; இரண்டாம் மனுஷன் வானத்திலிருந்து வந்த கர்த்தர்'' (1 கொரி 15:47.) இவர் யார்? வானத்திலிருந்து வந்த கர்த்தர்! இவரே இரண்டாம் மனுஷன், (ஆங்கிலத்தில் ஆதாம் என்னும் வார்த்தையைக் காண்க) இரண்டாம் ஆதாம் அதாவது வானத்திலிருந்து இறங்கி மனிதனாய் அவதரித்தவர்.



புத்தகங்களையும் நன்கு பயின்று பல உயர்வான பட்டம் பெற்று உயர்வான உத்தியோகங்களைச் செய்கிறவர்களும் சபைகளுக்கு தலைமை வகிக்கிறவர்களும் இந்த எளிய நடையில் இயேசு போதித்த ஞானஸ்நானத்தை கண்டுகொள்ளாமல் இடறிவிழுவதைப் பாருங்கள்.

24. இந்த ஞானிகளும் கல்விமான்களும் ஜலத்தினால் கொடுக்கப்படவேண்டிய இந்த ஒரே ஞானஸ்நானத்தை பலவிதமாகக் கொடுக்கின்றனர். சிலர் தண்ணீர் தெளித்து கொடுக்கப்படும் ஞானஸ்நானந்தான் சரி என்று போதித்து முத்திரையிட்டு இருக்கின்றனர். வேறுசிலர் மூழ்கி எடுக்கும் ஞானஸ்நானந்தான் சரி என்று சாதிக்கிறார்கள். சிலர் தண்ணீரைத் தலைமேல் ஒரு தடவை மாத்திரம் தெளிக்கிறார்கள். சிலர் மூன்று தடவை தெளிக்கிறார்கள். சிலர் மனந்திரும்பினவரை ஒரு தடவைத்தண்ணீரில் மூழ்க வைக்கிறார்கள். வேறு சிலர் மூன்று முறை மூழ்க வைக்கிறார்கள்.

25. சிலர் குழந்தைகளுக்கு ஞானஸ்நானங் கொடுக்கிறார்கள்; வேறு சிலர் வாலிபருக்கும் முதியோர்களுக்கும் மாத்திரமே கொடுக்கிறார்கள். சிலர் விசுவாசிக்கிறவர்களுக்கு மாத்திரமே கொடுக்கிறார்கள், வேறு சிலர் பத்து கற்பனைகளையும் பரமண்டல ஜெபத்தையும் மனப்பாடம் பண்ணினவர்களுக்குக் கொடுக்கிறார்கள். சிலர் ஒரு வாளித் தண்ணீரைத் தலைமேல் ஊற்றி ஞானஸ்நானங் கொடுக்கிறார்கள்; வேறு சிலர் தண்ணீரே அவசியமில்லை என்று சொல்லி மனந்திரும்பினவரை சபைமுன் வரப்பண்ணி அவருடன் கைகுலுக்கி 'உமக்கு நான் பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே ஞானஸ்நானங் கொடுக்கிறேன்' என்று முடிக்கின்றனர்.

26. இன்னும் கவனி! இயேசுவோடு சிலுவையில் அறையப்பட்டு அவரில் விசுவாசித்தக் கள்ளன் ஒருவன் ஞானஸ்நானம் பெறாமலேயே பரதீசுக்குச் சென்றானாம் ஆகவே சில சபை குருக்கள் ஞானஸ்நானமே அவசியமில்லை என்று போதித்து, சபையிலிருந்து ஞானஸ்நானத்தைத் தள்ளிவிட்டிருக்கின்றனர்! இது எல்லா ஜனத்தையுமே கள்ளர்களாக்க முடிவுபோலும்....

27. மேற்கூறினபடி, இத்தனை வித ஞானஸ்நானத்தையும் கொடுக்கிறவர்கள் சாதாரணமான மனிதர் அல்லர்! இவர்கள் ஞானிகளும் கல்விமான்களுமே! நாங்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றிருக்கிறோம் என்கிறவர்களே!

28. ஆனால் கவனி! இத்தனை வித ஞானஸ்நானங்களையும் கொடுக்கவா இயேசு கிறிஸ்து தமது சீஷர்களுக்குக் கட்டளை இட்டார்?

29. இல்லை!

30. அப்படியானால் இந்த ஞானிகளும் கல்விமான்களும் இத்தனை வித்தியாசமான கட்டளைகளை எங்கிருந்து பெற்றனர்? யாரிடமிருந்து பெற்றனர்? இத்தனை வித ஞானஸ்நானங்களும் எங்கிருந்து வந்தன? சிந்தித்துப்பார்க்க முடிகிறதா?

31. இத்தனை ஞானஸ்நானங்களும் லௌகிக ஞானத்திலிருந்தும், மாயமான தந்திரத்திலிருந்தும் மனுஷர்களின் பாரம்பரிய நியாத்திலிருந்தும் உலக வழிபாடுகளிலிருந்தும் வந்தனவே அல்லாமல் கிறிஸ்துவினிடத்திலிருந்து வரவில்லை: (கொலெசெயர் 2:8)

32. இயேசு கிறிஸ்து நம்முடைய விசுவாசத்தின் வீட்டை கன்மலையின்மேல்தான் கட்டச் சொன்னார். மணலின்மேல் அல்ல (மத்தேயு 7: 24-29) அந்த கன்மலை கிறிஸ்துவாகிய வார்த்தையே! வார்த்தையின் மேல்தான் நாம் நம்முடைய விசுவாசத்தை அஸ்திபாரப்படுத்த வேண்டும். மணல்- மனிதர்களாம் கல்வியினாலும் உலக ஞானத்தினாலும் வந்த போதனைகளாம். மனித போதனையாகிய மணல்மேல் கட்டப்பட்ட விசுவாசம் சீக்கிரம் வரப்போகும் நியாயத்தீர்ப்பில் விழுந்துபோகும்! ஆகவே, இன்று பலவிதமாகக் கொடுக்கப்படும் ஞானஸ்நானத்தை வார்த்தையுடன் ஒப்பிட்டுப் பார்த்து, எது வார்த்தையின்மேல் அஸ்திபாரப்பட்டிருக்கிறதோ அதை பிடித்துக் கொள்வோம். (1தெசலோனிக்கேயர் 5:21)

## தெளித்துக் கொடுக்கப்படும் ஞானஸ்நானம்

''...துர்மனச்சாட்சி நீங்கத் தெளிக்கப்பட்ட இருதயமுள்ளவர்களாயும், சுத்த ஜலத்தால் கழுவப்பட்ட சரீரமுள்ளவர்களாயும், உண்மையுள்ள இருதயத்தோடும் விசுவாசத்தின் பூரண நிச்சயத்தோடும் சேரக்கடவோம்'' (எபி 10:22)

33. தண்ணீரைத் தலைமேல் தெளித்துக் கொடுக்கப்படும் ஞானஸ்நானம் சரிதானா? இந்தக் கேள்வியைக் கேட்டதும் பல



என்னும் நாளில் சீஷர்கள் விளங்கிக் கொண்டனர் ஆனால், இந்த சத்தியத்தைக் கண்ணாரக்கண்டு வாசிக்கும் இக்கடைசி கால சீஷர்கள்'' குருடர்களாயிருப்பது என்ன?

85 பிதா என்பது ஒரு நாமமா? இது நாமமானால், வாசகரே உமது தகப்பனாருக்குத் தகப்பனார் என்பதா பெயர்? குமாரன் என்பது ஒரு நாமமா? உமது தகப்பனாரின் மகனாகிய உமக்கு மகன் என்றா பெயர் வைத்திருக்கிறார்கள்? பரிசுத்த ஆவியும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அனுப்பப்பட்டிருப்பதை நீர் அறியாமல் இருப்பது பிதாவின் சித்தமில்லை! (யோவான் 15: 16) பிதா குமாரன் பரிசுத்த ஆவி என்பவைகள்! பட்டப்பெயர்கள் ஆனால் ஒரு நாமம் உண்டு! அவரை யேகோவா யீரே என்றழைத்தனர். அதாவது கர்த்தர் தேவைகளைச் சந்திக்கிறவர்; யேகோவாநிசி என்றழைத்தனர் அதாவது கர்த்தர் ஜெயம் கொடுக்கிறவர்; அவரை அதோனி, மீட்பர், ஆச்சரியம், ஆலோசனை கர்த்தர் என்றழைத்தனர். இப்படி அவருக்குப் பல பட்ட பெயர்களும் உண்டு. ஆனால் அவருக்கு மனிதருக்குள்ளே வெளிப்படுத்தின நாமம் **ஒன்று** உண்டு ஆக, பிதாவின் நாமத்தையும் குமாரனுடைய நாமத்தையும் நீ அறிவாயோ?

86 ஊக்கமாக கவனி: ''நான் என் பிதாவின் நாமத்தில் வந்திருந்தும் நீங்கள் என்னை ஏற்றுக்கொள்ளவில்லை'' என்றார் இயேசு (யோவான் 5: 43) அவர் யாருடைய நாமத்தில் வந்தாராம்? பிதாவின் நாமத்தில்! அப்படியானால் பிதாவின் நாமம் என்ன? இயேசு ஜெபிக்கையில் (யோவான் 17:6 11,12,16) அவர், ''அவர்களை (சீஷரை) உம்முடைய நாமத்தினாலே காத்துக் கொண்டேன்' (யாருடைய நாமத்தில்? பிதாவின் நாமத்தில்!) ''மனுஷருக்கு உம்முடைய நாமத்தை வெளிப்படுத்தினேன் (இந்த வெளிப்பட்ட நாமம் எது? பிதாவின் நாமம்!)'' உம்முடைய நாமத்தை அவர்களுக்குத் தெரியப்படுத்தினேன்...'' (அந்த தெரியப்யடுத்தின நாமம் எது? பிதாவின் நாமம்!)...'' பிதாவே ......நீர் அவர்களை உம்முடைய நாமத்தினாலே காத்துக்கொள்ளும்'' என்றார் (அந்த நாமம் என்ன?)

87 அது யேகோவா என்ற நாமம் என்கிறீர்களா? இந்த நாமம் இஸ்ரவேலின் வீட்டாருக்கு ஏற்கனவே வெளிப்பட்டது. ஆனால் இயேசு வெளிப்படுத்தின நாமம் எது? ஆம். அந்த வெளிப்பட்ட நாமம், நமக்கு தெரிய வைக்கப்பட்ட நாமம், நம்மைக் காத்துக் கொள்ளும் நாமம் என்ன?)

88 கவனி!

டமாய் வாசித்து ஞானிகளும் கல்விமான்களும் இதை ஒரு சூத்திரமாக்கிக் கொண்டுள்ளனர்

அப்போஸ்தலர் கொடுத்த ஞானஸ்நானம் ''நான் உனக்குக் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் கொடுக்கிறேன்'' அப் 2:38; 8:15; 19;5 இந்த ஞானஸ்நானத்துக்கு பேதுரு பிலிப்பு பவுல் ஆகியோர் சாட்சிக் கூறினர். இன்று ஞானிகளும் கல்விமான்களும் கொடுக்கும் ஞானஸ்நானம் நான் உனக்கு பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே ஞானஸ்நானம் கொடுக்கிறேன்'' -மத் 28:19 இந்த ஞானஸ்நானம் கி.பி. 325 ஆம் ஆண்டு ரோமன் கத்தோலிக்கச் சபையின் தெளித்தல் ஞானஸ்நானத்தில் ஆரம்பித்து இன்று பெந்தேகோஸ்தே சபையில் மூன்று தடவை மூழ்கி எடுக்கும் ஞானஸ்நானத்தில் காணப்படுகிறது இது கத்தோலிக்க வெண் அங்கியிலும் சிலோன் பெந்தெகோஸ்தே வெண்வேட்டியிலும் சட்டையிலும் அலங்காக்கப்பட்டு இருந்தாலும், மத்தேயு 28: 19ல் மறைபொருளாய் கூறப்பட்டுள்ள நாமம் இவர்கள் அளிக்கும் ஞானஸ்நானத்தில் இல்லை இப்போது மத் 28:19தை ஆராய்வோம்.

> ''ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து''

83 கவனி! ''பிதா குமாரன் பரிசுத்த ஆவி'' ஒருமையா அல்லது பன்மையா? இது பன்மையானால் ''நாமத்திலே'' என்னும் ஒருமையான வார்த்தைக்குப் பதிலாக ''நாமங்களிலே'' என்னும் பன்மையன வார்த்தை இருந்திருக்குமல்லவா? ''பிதா, குமாரன், பரிசுதத ஆவி'' என்பது ஒரே நாமத்தைக் குறிக்கிறது என்பது கிறிஸ்து லூக்கா 24:47-ல் கொடுத்த அதிகாரத்தில் விளக்கப்படுகிறது. அதாவது ''மனந்திரும்புதலும் பாவமன்னிப்பும்........ அவருடைய நாமத்தினாலே பிரசங்கிக்கப்படவும் வேண்டியது'' ஒருமையான இந்த உன்னத நாமம் பெந்தெகோஸ்தே என்னும் பண்டிகை நாளில் பரிசுத்தஆவி விசுவாசிகள் மேல் இறங்கின போது பரலோக ராஜ்யத்தின் திறவுகோலைப்பெற்ற பேதுருவின் வாயிலிருந்து வெளிப்பட்டது. அவன் ''இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள்......'' என்றான் (அப் 2:38) அப்போது 3000 பேர் ஞானஸ்நானம் பெற்றுக் கொள்கின்றனர்.

84 அப்படியானால் பிதாவின் நாமம் என்ன? குமாரனுடைய நாமம் என்ன? பரிசுத்த் ஆவியின் நாமம் என்ன? பிதா குமாரன் பரிசுத்த ஆவிக்கு ஒரே நாமம் உண்டு என்று பெந்தெகோஸ்தே.



கிறிஸ்தவ சகோதரருக்குக் கோபம் வருகிறது. இந்த சிறு கைபிரதியில் நாம் உலகத்தில் கொடுக்கப்படும் ஒவ்வொரு ஞானஸ்நானங்களையும் வார்த்தையோடு ஒப்பிட்டுப் பார்க்கப்போவதால் சற்று பொறுமையாய் இருந்தால், சத்தியம் நமக்கு விளங்கும். சத்தியம் மாத்திரமே நம்மை உலகக் கட்டுக்களிலிருந்து விடுதலையாக்க வல்லது (யோவான் 8:32.)

34. கிறிஸ்தவர்களாகிய நாம் வார்த்தையின்மேல் அஸ்திபாரப்பட்டிருக்கவேண்டும் என்ற ஒரே நோக்கத்தோடுதான் இந்தக் கைப்பிரதி எழுதப்பட்டு இருக்கிறது. வேதாகமத்தில் இல்லாததைக் குறித்து வாக்குவாதம் பண்ணுவது தேவனுக்கு அருவருப்பானது. வார்த்தைக்குப் பயந்து ஏசாயா 66:1-2,5 நாம் நமது இதயங்களை வேதாகமத்துக்குத் திருப்பவேண்டும். தேவனுடைய ராஜ்யம் சமீபமாயிருக்கிறது!

35. நோவாவின் பேழையிலிருந்து எட்டுப்பேர் ஞானஸ்நானம் பெற்றார்களாம் (1பேதுரு 3:20-21.) பேழைக்கு மேலேயும் கீழேயும் தண்ணீர் இருந்தது. எகிப்திலிருந்து புறப்பட்ட ஆறு லட்சத்துக்கு மேலான இஸ்ரவேலரும் ஞானஸ்நானம் பெற்றார்காளாம் (1கொரிந்தியர் 10: 1-15) இருபுறமும் செங்கடற் தண்ணீரும் தலைக்குமேல் மேகமும் இருந்ததாகக் கூறப்படுகிறது. அவர்கள் 'மோசேக்குள்ளாக' ஞானஸ்நானம் பெற்றார்களாம்.

36. புதியஏற்பாட்டில் முதலாவது ஞானஸ்நானம்கொடுக்க அனுமதிக்கப்பட்டவன் யோவான்ஸ்நானகனே. அவன் யோர்தான் நதியில் ஞானஸ்நானம் கொடுத்தானாம் யோவான்1:28 'சாலிம் ஊருக்கு சமீபமான அயினோன் என்னும் இடத்தில் தண்ணீர்மிகுதியாயிருந்தபடியினால், யோவானும் அங்கே ஞானஸ்நானங் கொடுத்து வந்தான்; ஜனங்கள் அவனிடத்தில் வந்து ஞானஸ்நானம் பெற்றார்கள்' (யோவான் 3: 23)

37. நோவாவின் பேழையிலிருந்த எட்டுபேர் ஞானஸ்நானம் பெற ஜலப்பிரளயமும், இஸ்ரவேலின் ஆறு லட்சம் பேருக்கு செங்கடலும் மேகமும் அவசியமாயிருந்தது. யோவான் கொடுத்த மனந்திரும்புதலின் ஞானஸ்நானத்தைப் பெற யோர்தான் நதியின் 'தண்ணீரை மிகுதியாக' இருந்த இடம் அவசியமாயிருந்தது. அப்படியானால் தெளிப்பதுதான் ஞானஸ்நானம் என்று ஆதாரமற்ற வேதாந்தம் ஓதுவது கிறிஸ்தவ ஞானத்துக்கு புறம்பானதும், வார்த்தையாகிய இயேசுவை எதிர்ப்பதுமாகும். கிறிஸ்தவ சபை வரலாறு தெளித்தளிக்கும் ஞானஸ்நானத்தைக் கத்தோலிக்கப் பாரம்பரிய புளித்த மாவு என்று திட்டவட்டமாய்க் கூறுகிறது.

***38.*** நண்பனே, தெளிப்பது **ஸ்நானமாகுமா? அல்லது** ஸ்நானந்தான் தெளித்தல் என்று பொருள்படுமா தெளிப்பதற்கும் ஸ்நானம் பண்ணுவதற்கும் வெவ்வேறு செயலும் அர்த்தமும் இருப்பதை நீ கண்டுகொள்ளாதது ஏனோ? உன் பிடிவாதம் சபை போதனையின் ஆவேசத்தினால் **உண்டா**யிருக்கிறது என்பதைக் கண்டுக்கொள்வது அவசியம்! தேவனுடைய ராஜ்யம் சமீபமாயிருக்கிறது

***39.*** இயேசு .'ஞானஸ்நானம் பெற்று ஜலத்திலிருந்து கரையேறினார்' என்று மத்தேயு ***3:16***ல் குறிப்பிடப்பட்டுள்ளது. தெளிக்கும் ஞானஸ்நானத்தைப் பெறவாஅவர் தண்**ணீ**ரில் இறங்கியிருப்பார் சிலர் தண்**ணீ**ரில் இறங்கினதை கவனி எத்தியோப்பியா தேசத்தின் பொக்கிஷ மந்திரிக்கு பிலிப்பு ஞானஸ்நானம் கொடுத்தது அப்போஸ்தலர் ***8:38***ல் குறிப்பிடப்பட்டிருக்கிறது: பிலிப்பும் மந்திரியும் ஆகிய இருவரும் தண்**ணீ**ரில் இறங்கினார்கள்; 'பிலிப்பு அவனுக்கு ஞானஸ்நானங்கொடுத்தான்.... தெளிப்பதே ஞானஸ்நானமானால், அவர்கள் தண்**ணீ**ரில் இறங்கினது ஏனோ இதற்குப் பரிசுத்த பவுலே பதிலளிக்கட்டும்:

***40.*** கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாம் அனைவரும் அவருடைய மரணத்துகுள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா? (அறிய வேண்டும்) மேலும் பிதாவின் மகிமையிலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பட்பட்டதுபோல நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்துகொள்ளும்படிக்கு (கவனி) அவருடைய மரணத்துக்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனேகூடஅடக்கம் பண்ணப்பட்டோம் ரோமர் ***6:3-4***

***41.*** ஞானஸ்நானத்தினாலே நாம் கிறிஸ்துவுடனே கூட அடக்கம் பண்ணப்பட்டோம் என்கிறான் பவுல். தெளிப்பதென்றால் அடக்கம் பண்ணப்படுவது என்று பொருளா என்ன? குழிதோண்டி புதைப்பதுதான் அடக்கம் பண்ணப்படுதலாகும். சரீரம் **முழுவதும் மூழ்கத்தக்கதான தண்ணீர் சவகுழிக்கு ஒரு மாதிரி.**

***42.*** தாயின் வயிற்றிலிருந்து குழந்தையின் முழு சரீரமும் **வெளியே** வந்தால்தான் அதை நாம் பிறப்பு என்கிறோம். நம்முடைய சரீரம் முழுவதும் **தண்ணீ**ரில் மூழ்கி வெளியே வந்தால் ஒழிய **அதைத் தண்ணீ**ரினால் பிறந்ததின் நிச்சயமாக எப்படி ஏற்றுக்கொள்ளக்கூடும் தண்ணீரில் மூழ்கும் போது நாம் உலகத்துக்கு மரித்தவர்களாய் கிறிஸ்துவோடே அவருடைய மரணத்துக்குள் அடக்கம் பண்ணப்படுகிறோம். தண்ணீரைவிட்டுவெளியே வரும்போது, புதிதாய் பிறந்தவர்கள்போல் நாம் புதிய வாழ்வடை



***79.*** பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை ஒப்புவிக்கப்பட்ட ஆதி சுவிசேஷம் இதுவே (யூதா 3). இரட்சிப்புக்கென கொடுக்கப்பட்ட நாமம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமமே! கிறிஸ்துவின் மேல்தான் சபையும் அஸ்திபாரப்பட்டது (*1* கொரிந்தியர் ***3:11-20***). இந்த நாமத்தையும் நமது மீட்பரையும், பரிசேயரும் சதுசேயரும் வேதப்பாரகரும் தள்ளிவிட்டனர். அது மூலைக்குத் தலைக்கல்லாயிற்று (சபைக்குத் தலை கல்லாயிற்று). இன்றைக்கு ஞானிகளும் கல்விமான்களும் ஞானஸ்நானத்தில் இந்த உன்னதமான நாமத்தை விலக்கி பெயரற்ற கத்தேலிக்க 'ஞானஸ்நானமாகிய' பிதா குமாரன் பரிசுத்த ஆவி என்ற சூத்திரத்துக்கு ஆதரிப்பு காட்டி தங்களை தாங்களே வஞ்சித்துக் கொள்வதென்ன?

***80*** ஒரு விசை ஒப்புவிக்கப்பட்ட ஆதி விசுவாசம் அவ்விசுவாசத்தின் விளைவால் மங்கஆரம்பித்து, சத்திய போதனைகள் குன்றத்துவக்கி ''பச்சை புழு விட்டதை வெட்டுக்கிளி தின்றது: வெட்டுக்கிளி விட்டதைப் பச்சைக்கிளி தின்றது; பச்சைகிளி விட்டதை முசுக்கட்டைப் பூச்சி தின்றது'' யோவேல் ***1:4.*** ஆனாலும் இவ்வாறு தின்னப்பட்ட போதனைகளை கடைசி நாட்களில் திரும்பக் கொடுக்க தேவன் வாக்களித்துள்ளார் யோவேல் ***2:25-26.*** கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அளிக்கப்படும் ஞானஸ்நானமும் இக்காலத்தில் திரும்ப அளிக்கப்பட்ட போதனைகளில் ஒன்று.

***81*** ''பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினால்'' என்பதை ஒரு சூத்திரமாக்கி ஞானஸ்நானம் அளித்த சீஷனும் பெற்ற விசுவாசியும் நாம் வாசிக்கும் வேதாகமத்தில் இல்லை! இல்லாததை இருக்கிறதாக ஓதும் புளித்தமாவு வேதாந்தங்களைவிட்டு, பாரம்பரை சடங்குளைவிட்டு, வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கும் உண்மையான ஒரே முழுக்கு ஞானஸ்நானத்தைப் பெற்று பரிசுத்த ஆவியின் வரத்தைச் சொந்தமாக்கிக் கொள்ளுங்கள் கர்த்தர் மத்தேயு ***28:19*** ல் கொடுத்த கட்டளையை மத்தேயுவும் பேதுருவும் கேட்டுக்கொண்டிருந்தனர். பேதுரு அப். ***2:38*** ல் ''இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள்'' என்ற போது மத்தேயுவும் அங்கே இருந்தான். அவன் ''அது தவறு'' என்று எதிர்த்துப் போராடவில்லை ஆனால் இன்று இந்த ஞானஸ்நானம் தவறு என்று கூறி பலரை இருளுக்கு வழி நடத்தும் ஊழியர்கள் உண்டு. என்ன பரிதாபம்!

## மத்தேயு 28:19-ல் கிறிஸ்து கூறின ஞானஸ்நானம் தவறா?

***82*** இல்லை! மத்தேயு ***28:19*** ம் அப் ***2:38***ம் ஒரே ஞானஸ்நானத்தைக் குறிக்கின்றன மத்தேயு ***28:19***ஐ மேலோட்

களா?' என்று எழுதினான் (ரோமர் 6:3). பவுலும் ரோமாபுரி கிறிஸ்தவர்களும் யாருக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றார்களாம்? கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக!

(க) பவுல் கலாத்தியருக்கு எழுதின நிருபத்தில் அவர்கள் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றார்கள் என்கிறான். 'ஏனெனில் உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனை பேரோ, அத்தனை பேரும் கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டீர்களே'! (கலாத்தியர் 3:27).

(ங) கொலோசெயரும் கிறிஸ்துவோடே ஞானஸ்நானத்தில் அடக்கம் பண்ணப்பட்டார்கள்! (கொலோசெயர் 2:11-13). ரோமர், கலாத்தியர் கொலோசெயர் - இவர்கள் பெற்றுக்கொண்ட ஞானஸ்நானத்தைக் கண்டீர்களா? தமிழ் நாட்டு கிறிஸ்தவர்களே வானத்தில் கீழெங்கும் மனுஷர்களுக்குள்ளே கர்த்தர்கிய இயேசு கிறிஸ்துவின் நாமமேயல்லாமல் நம்மை இரட்சிக்க வேறொரு நாமம் அருளப்படவில்லை என்பதைக் கண்டுகொள்வீர்களானல் பாக்கியவான்களாயிருப்பீர்கள்! (அப் 4:12)

## சரித்திரமும் ஒரு சாட்சி :

78. கி.பி. 325-ஆம் ஆண்டுவரை தேவனுடைய ராஜ்யத்தின் சுவிசேஷத்தை விசுவாசித்து மனந்திரும்பினவர்களுக்கு அப்போஸ்தலர்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் மாத்திரமே ஞானஸ்நானம் கொடுத்து வந்தனர் பின்னர் ரோமாபுரி கத்தோலிக்கச்சபை அதிகாரிகள் ஞானஸ்நானத்திலிருந்து கர்த்தராகிய இயேசுவின் பெயரை அகற்றி ''பிதா குமாரன் பரிசுத்த ஆவி'' என்பதை ஒரு சூத்திரமாக்கி, இந்த சூத்திரத்தில் ஞானஸ்நானம் கொடுக்கலாயினர். இது உண்மை என்பதை அறிய கீழ்காணும் வேதாகம அகராதிகளிலும் சகலகலா நூல்களிலும் குறிப்பு காண்க:-

(அ) Scribner என்பவரின் வேதாகம அகராதி, முதலாம் புத்தகம் 241 ஆம் பக்கம்

(க) CANNEY என்பவரின் சகலகலா நூல் 53 ஆம் பக்கம்

(ங) புதிய அகில உலக சகலகலா நூல் 22 ஆம் பக்கம் 476 ஆம் பக்கம். (

(ச) JAMESHASTINGS என்பவரின் வேதாகம அகராதியில் ஞானஸ்நானம்' என்ற தலைப்பின் கீழ் குறிப்பு காண்க.



கிறோம். அதுதான் இயேசு மரணத்திலிருந்து உயிர்த்தெழுந்தது போல, நாமும் எழுவோம் என்ற விசுவாசத்தின் நிச்சயமாய் இருக்கிறது. இது தெளிப்பதல்ல. இது பிறப்பது ரோமர் 6:5-8

43. எனவே நீங்கள் தண்ணீரினால் மூழ்கி ஞானஸ்நானம் பெறவில்லையானால் நீங்கள் தண்ணீரினால் பிறக்கவும் இல்லை, ஆகவே நீங்கள் இந்நாள்வரை ராஜ்யத்துக்குப் புறம்பாகத்தான் இருந்து வருகிறீர்கள்!! ஏனென்றால் கிறிஸ்துவுடனே அடக்கம் பண்ணபடாதவன் அவருடைய உயிர்த்தெழுதலிலும் பங்கடைவதில்லை

44. 'ஸ்நானம்' என்னும் வார்த்தைக்கு 'தெளித்தல்' என்றும் அர்த்தமில்லை என்பது விளங்குகிறதா? இது 'கழுவுவது' என்றும் பொருள்படுவதில்லை. 'ஊற்றுவது' என்றும் இந்த வார்த்தைக்கு அர்த்தமில்லை. இதற்கு 'நீராடுதல்' என்று பொருள். தேவனுடைய ராஜ்யத்தைப் பற்றியும் கிறிஸ்துவைப் பற்றியும் ஞானம் பெற்றப்பின் அவருடன் அடக்கம் பண்ணப்பட்டு உயிர்த்தெழுதலின் சாயலில் வாழ்வதுதான் இந்த வார்த்தையின் வேதாகம அர்த்தம். வாக்குவாதத்தை விட்டு வேதாகமத்துக்குத் திரும்பி வாருங்கள். உங்கள் விசுவாசத்தையும் உங்கள் சபையையும் தேவ வார்த்தையின்மேல் அஸ்திபாரப்படுத்திக்கொள்ளுங்கள். தேவனுடைய ராஜ்யம் சமீபமாயிருக்கிறது. உங்கள் சபை-போதனையின் பிடிவாதத்தினால் உண்டாயிருக்கும் சொந்த போதனை எடுபட்டுபோகும் நாள் தூரமில்லை.

45. புதிய ஏற்பாட்டின் புதிய திருப்புதலில் ஞானஸ்நானத்தைத் 'திருமுழுக்கு' என்று மொழி பெயர்த்தவர்கள் இதைத் திருதெளிப்பு' என்று ஏன் எழுதாமற்போனார்களோ. முழுக்கு என்றால் தண்ணீரில் மூழ்குவதைக் குறிக்கிறதே.

## ஞானஸ்நானம் யாருக்கு கொடுக்கப்பட வேண்டும்?

46. 'விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாக தீர்க்கப்படுவான்' என்றார் இயேசு (மாற்கு 16: 16). அப்படியானால் விசுவாசிக்கிறவர்களுக்குத்தான் ஞானஸ்நானம் கொடுக்க வேண்டும் அல்லவா? விசுவாசிக்காதவனுக்கு ஞானஸ்நானம் கொடுத்தால் என்ன? கொடுத்தால் அவனை ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்துவிட்டோம் என்று பொருள்.

47. அம்மா என்று அழைக்கத் திராணியற்ற சின்னஞ்சிறு பாலகருக்கு தெளித்தல் ஞானஸ்நானத்தைக் கொடுக்கிறார்களே

இவர்கள் யார்? இவர்கள் ஞானிகளும் கல்விமான்களும் பட்டம் பெற்றவர்களுமே, இவர்கள் இந்த ஞானஸ்நானத்தை எங்கிருந்து பெற்றார்கள். கி. பி. 325ஆம் ஆண்டு இது கத்தோலிக்கச் சபையின் நிசேயா புளித்தமாவாக வெளிப்பட்டது. இது வேதாகமத்தில் இல்லாதது. இது, தர்க்கத்தினாலும் பிடிவாதத்தினாலும் பல சபைகளில் இடம் பெற்று வருகிறது. ஆனால் இயேசு, 'விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்' என்றார். இயேசு சொன்ன வார்த்தைகளை நம்புவீர்களா அல்லது இந்த நவீன கல்விமான்களும் ஞானிகளும் கூறும் வார்த்தைகளை நம்புவீர்களா? மனிதனை நம்பி மோசம் போகாதீர்கள். இயேசு கூறின வார்த்தைக்குக் கீழ்ப்படியுங்கள். இயேசு சீக்கிரமாய் வருகிறார்.!

சிறுபிள்ளைகள் என்னிடத்தில் வரத் தடைசெய்யாதீர்கள் என்று சொல்லி இயேசு சிறுவர்களை ஆசீர்வதித்தாரே தவிர அவர் அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கச் சொல்லவில்லை (மத்தேயு 19:13-15) விசுவாசிகளுக்கு ஞானஸ்நானம் கொடுக்கச் சொன்ன கர்த்தர், பிலிப்பி என்னும் பட்டணத்தின் சிறைச்சாலைக்காரன் வீட்டில் இருந்ததாகக் கூறப்படும் சிறு குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுக்க பவுலுக்குக் கட்டளையிட்டிருப்பார் என்பது வேதாகமத்தில் இருக்கிறதா? இல்லை- சிறைச்சாலைக்காரன் வீட்டில் சிறு பிள்ளைகள் இருந்திருப்பார்கள் என்று வாதாடுகிறார்கள். அது ஞானிகளும் கல்விமான்களும் செய்யும் அனுமானம். ஆனால் அது வேதாகமத்தில் இல்லை. அப்போஸ்தலர் 16:22-34 வரை வாசித்துப் பாருங்கள். மனித விளக்கம் வேதாகமத்தில் இல்லாதது.

ஞானஸ்நானம் எடுத்த பாலகரும், பாலகருக்கு ஞானஸ்நானம் கொடுத்த சீஷனும் வேதாகமத்தில் இல்லை. பாலகருக்கு ஞானஸ்நானம் கொடுப்பது தவறு இல்லை என்று உரைக்கும் தத்துவ-சாஸ்திரத்தை சபைகளிலிருந்து எடுத்துப் போடுங்கள். வேத-வார்த்தையின்மேல் அஸ்திபாரப்பட்டு இருங்கள்!

## ஒரு வாளித் தண்ணீரை தலைமேல் ஊற்றுவது ஞானஸ்நானமா?

தமது சீஷர்களின் கால்களைக் கழுவ பாத்திரத்தில் தண்ணீரை வார்த்த இரட்சகர், - பாத்திரத்திலிருக்கும் தண்ணீரினால் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளாமல் யோர்தான் நதிக்குச் சென்றது ஏனோ? தெளிப்பதும் ஊற்றுவதும் பிறப்பதைச் சுட்டிக் காட்டுவதில்லை. நாம் தண்ணீரினால் பிறக்க வேண்டுமென்றார்



## பவுல் மூன்றாம் சாட்சி :

74. புதிய ஏற்பாட்டின் 24 புத்தகங்களில் 14 புத்தகங்களை எழுதினவன் பரிசுத்த பவுலே. பவுலுக்கு மற்ற அப்போஸ்தலர்கள் போதிக்கவில்லை. இவனுக்குக் கிறிஸ்து தாமே நேரடியாக வெளிப்பாடுகளைக் கொடுத்தார் (கலாத்தியர் 1:11-14, 18-20) புற ஜாதியாருக்குப் பிரசங்கியாகவும் அப்போஸ்தலனாகவும் போதகனாகவும் நியமிக்கப்பட்டவன் (2 தீமோத்தேயு 1:10-11) இயேசுவின் நாமத்துக்காக இவன் சகித்தத் துன்பங்களையும் பட்டபாடுகளையும் மற்ற அப்போஸ்தலர் சகித்தார்கள் என்பதற்கு ஆதாரமில்லை. இவனுடைய சாட்சியையுமா தள்ளிவிடுவீர்கள்?

75. இன்று 'நாங்கள் இயேசு மத்தேயு 28:19ல் கூறின வார்த்தைகளைத்தான் ஏற்றுக்கொள்வோம்; பேதுரு அப் 2: 38 ல் கூறினதை ஏற்றுக் கொள்ளமாட்டோம்' என்கிறவர்கள் கொடுக்கும் ஞானஸ்நானத்துக்கும் பவுல் இயேசுவினிடம் நேரடியாய்க் கற்ற ஞானஸ்நானத்துக்கும் வித்தியாசத்தைப் பாருங்கள்.

76. பவுல் எபேசுக்குச் சென்று யோவான் ஸ்நானகன் கொடுத்த ஞானஸ்நானத்தைப் பெற்ற சில சீஷர்களைக் கண்டான் பவுல் அவர்களுக்கு யோவான்ஸ்நானகன் கொடுத்த ஞாஸ்நானம் செல்லாது என்றும், இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் ஞானஸ்நானம் பெறுவது அவசியம் என்றும் கூறினான். 'அதைக் கேட்டபோது அவர்கள் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றார்கள்' (அப் 19:5). ஆனால் இன்று தெளித்தல் ஊற்றல் ஞானஸ்நானம் பெற்றவர்களும் பெயரற்ற முழுக்கு ஞானஸ்நானம் பெற்றவர்களும் உண்மையான ஞானஸ்நானத்தை மந்தையின் ஆட்டுக்குட்டிகள் மேய்ப்பவனுக்கு கீழ்படிவதுபோல வேதவாக்கியத்துக்குக் கீழ்படிந்து ஏற்றுக் கொள்வார்களா? ஆனால் இயேசு ஆடுகளுக்கு மாத்திரமே மேய்ப்பராயிருக்கிறார் மற்ற மிருகங்களை அவர் மந்தையில் சேர்ப்பதில்லை!

77. பவுல் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே கொடுத்த ஞானஸ்நானத்துக்கு மூன்று சான்றுகள் உள்ளன.

(அ) ரோமாபுரியிலிருந்து அத்தனை விசுவாசிகளும் இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றார்கள்! சந்தேகமாய் இருக்கிறதா? கவனியுங்கள்! அவன் ரோமருக்கு, 'கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாம் அனைவரும் (பவுலும் ரோமாபுரி விசுவாசிகள் அத்தனை பேரும்) அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்

70. பேதுரு கர்த்தரால் அனுப்பப்பட்டு கொர்நெலியுவுக்கும், அவன் உறவின் முறையாருக்கும், விசேஷித்த சிநேகிதருக்கும் சுவிசேஷத்தை அறிவித்தான். அவர்கள் அந்நிய ஜாதியராயிருந்தனர். அவர்கள்மேல் பரிசுத்த ஆவி இறங்கினதைக் கண்ட அவன், அவர்களுக்குக் கர்த்தரின் நாமத்தில் (மூல பாஷையாகிய கிரேக்க மொழியில் இருக்கும் வேதாகமத்தில் கர்த்தரின் நாமத்தில் என்பதற்கு பதிலாக 'இயேசுகிறிஸ்துவின் நாமத்தில்' என்று இருக்கிறது. பல ஆங்கில ரெப்ரென்ஸ் வேதாகமங்களிலும் இவ்வண்ணம் எழுதியிருக்கிறது) ஞானஸ்நானம் கொடுக்கக் கட்டளையிட்டான்.

## பிலிப்பு இரண்டாம் சாட்சி :

71. பிலிப்பு கர்த்தரால் ஊழியத்துக்கு அழைக்கப்பட்டவன். இவன் ஒரு சீஷன் (யோவான் 1 : 43) மற்ற அப்பேஸ்தலருடன் இவனும் பெந்தெகோஸ்தே பண்டிகையன்று பரிசுத்த ஆவியை பெற்றவன் (அப் 1 : 13) ஆவியானவரால் தெரிந்துக் கொள்ளப்பட்ட ஏழு பேரில் இவனும் ஒருவன். இவன் பரிசுத்த ஆவியும் ஞானமும் நிறைந்து நற்சாட்சி பெற்றவன் (அப் 6 : 3- 6). இவன் சுவிசேஷகனாய் ஊழியம் செய்து வந்தான் (அப் 21 : 8). எத்தியோப்பியாவுக்கு செல்லும் வழியில் ஒரு மந்திரிக்கு ஞானஸ்நானம் கொடுக்க கர்த்தருடைய தூதன் இவனிடம் சொன்னான்; ஆவியானவர் இவனுடன் பேசினார் (அப் 8:26 - 30). இந்த மனுஷனுடைய சாட்சியை ஏற்றுக்கொண்டு மனந்திரும்புவீர்களா, அல்லது கல்விமான்களுக்கும் ஞானிகளுக்கும் பின் சென்று ராஜ்யத்துக்குப் புறம்பே இருப்பீர்களா?

72. பிலிப்பு சமாரியாவிலே பிரசங்கம் செய்து அற்புதங்களால் வார்த்தையை நிரூபித்தான் (அப் 8:5 - 8) விசுவாசித்தவர்களுக்கு கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே ஞானஸ்நானங்கொடுத்தான் (அப் 8 : 14 - 17). நீங்கள் கொடுக்கும் ஞானஸ்நானந்தான் சரி என்பதை நிரூபிக்க வேத வாக்கியத்திலுள்ளதை வித்தியாசமாக விளக்குவது ஏன்?

73. பேதுருவிலும், பிலிப்புவிலும் இருந்த பரிசுத்த ஆவி இன்று எந்த ஊழியனில் இருக்கிறதோ அவன் பேதுருவும் பிலிப்புவும் கொடுத்த ஞானஸ்நானத்தையே கொடுப்பான் அல்லவா? திராட்சைச் செடி இன்று ஒரு புதிய கிளை விடுமானால் அந்தக் கிளையிலும் திராட்சைப் பழமே காணப்படுமல்லவா? மரங்களைக் கனிகளினால் கண்டுகொள்ளுங்கள்! (மத்தேயு 7:16).



இயேசு. அவருக்கு கீழ்படிவீர்களா? ஞானிகளே, கல்விமான்களே, உங்களை தேவன் உங்கள் தந்திரங்களில் பிடிக்கும் நாள் தூரமில்லை யோபு 5:13

## ஞானஸ்நானத்துக்கு தண்ணீர் அவசியமில்லையா?

ஒருவன் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க வேண்டுமானால் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறக்க வேண்டுமென்று உபதேசித்த கர்த்தர் தாம் ஞானஸ்நானம் பெற யோர்தான் நதிக்கு சென்றார். அவர் தண்ணீரின் அவசியத்தைக் கண்டு, தாமே, மாதிரியாகக் காட்டினார். ஆனால் தண்ணீர் அவசியமில்லை என்று வேதாந்தம் ஓதி பெலவீனமான ஜனங்களை தண்ணீருக்கு விலக்கி ராஜ்யத்துக்குப் புறம்பாக்கும் ஞானிகளையும் கல்விமான்களையும் தேவன் சந்தித்து நியாயந்தீர்க்க சீக்கிரமாய் வருகிறார் '....ஆட்டுத் தொழுவத்துக்குள் வாசல்வழியாய் பிரவேசியாமல், வேறு வழியாய் ஏறுகிறவன் கள்ளனும் கொள்ளைக்காரனுமாயிருக்கிறான். வாசல் வழியாய் பிரவேசிக்கிறவனோ ஆடுகளின் மேய்ப்பனாயிருக்கிறான்' என்றார் இயேசு யோவான் 10: 1- 2. சபையின் மேய்ப்பர்களே' தண்ணீரின் வழியைவிட்டு, சொந்த வழியில் நீங்கள் இடறி விழுகிறதென்ன? '....தண்ணீரை விலக்கலாமா?' என்றார் பேதுரு! அப்போஸ்தலர் 10:47 நீங்கள் செய்கிறதென்ன.

## ஞானஸ்நானத்தை விலக்கலாமா?

48. ஞானஸ்நானம் கொடுங்கள் என்றார் இயேசு மத்தேயு 28:19 ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள் என்றான் பேதுரு அப்போஸ்தலர் 2 38' ஞானஸ்நானம் அவசியமில்லை என்கிறார்கள் 'இரட்சிப்பின் படையைச்' சேர்ந்த ஞானிகளும் கல்விமான்களும். வாசகர்களே, நீங்கள் யாருக்குக் கீழ்ப்படிவீர்கள்? கிறிஸ்துவுக்கும் அவருடைய அப்போஸ்தலனுக்குமா அல்லது இந்தப் 'படை' அதிகாரிகளுக்கா?... மனுஷனுக்கு கீழ்ப்படிகிறதைப் பார்க்கிலும் தேவனுக்குச் கீழ்ப்படிகிறதே அவசியமாயிருக்கிறது என்றார்கள் கிறிஸ்துவினால் அபிஷேகம் பெற்ற அப்போஸ்தல'கள் அப்போஸ்தலர் 5:29

## முழுக்கு ஞானஸ்நானம் சரியானதா?

49. ஐயா, எந்த முழுக்கு ஞானஸ்நானம்? சகோதர சபையின் முழுக்கா அல்லது பேப்டிஸ்டு சபையின் முழுக்கா?

த. பெந்தெகோஸ்தே சபையின் முழுக்கா, அல்லது இந்தியன் பெந்தெகோஸ்தே சபையின் முழுக்கா? சகோதரனே, ஒருதடவை முழுக்கா, இரண்டு அல்லது மூன்று தடவை முழுக்குகளா? முகங்குப்புற முழுக்கா அல்லது முதுகு பக்கம் முழுக்கா?

50 முழுக்கு ஞானஸ்நானம் கொடுக்கும் எல்லா ஊழியர்களுமே தாங்கள் பரிசுத்த ஆவியினால் பிறந்தவர்கள் என்றும் ஆவியின் அபிஷேகம் பெற்றவர்கள் என்றும் கூறுகின்றனர். இத்தனை சபைகளும் ஒரே ஆவியினால் பிறந்திருப்பது உண்மையானால், இவர்கள் ஒரேவிதமான முழுக்கு ஞானஸ்நானம் கொடுப்பார்கள் அல்லவா? ஆவியானவர் சகல சத்தியத்துக்குள்ளும் நடத்துகிறவராயிற்றே! (யோவான் 16: 13) ஆவியானவர் இயேசு சொன்னவைகளை நினைப்பூட்டுகிறவராயிற்றே! (யோவான் 14:26)

51 தண்ணீரினால் பெற்றுக் கொள்ளும் ஞானஸ்நானம் தேவனுடைய ராஜ்யத்தைத் திறக்கும் திறவுகோல் சாவி இது மனுஷனால் உருவாக்கப்பட்டதல்ல. இது இயேசுவே பேதுருவினிடம் ஒப்புவித்த சுவிசேஷ திறவுகோல், மத்தேயு 16: 15-20 இயேசுவின் தூய வல்ல வார்த்தைகளுடன் மனிதன் தன் சொந்த ஞானத்தைக் கூட்டினதன்காரணமாய்தான் இத்தனைவிதமுழுக்கு ஞானஸ்நானங்களும் காணப்படுகின்றன இத்தனைவித முழுக்கு ஞானஸ்நானங்களை கொடுக்கும் சபையாரின் விளக்கங்களுக்கும் வியாக்கியாளங்களுக்கும் முடிவில்லை. ஆனால் வேதவசனத்தில் இதைக்குறிக்கும் ஆதாரங்கள் பல.

52 நோவாவின் பேழையிலிருந்த எட்டுபேர் பிரளயத்தில் ஞானஸ்நானம் பெற்றார்கள் (பேதுரு 3 20 21) நோவாவின் பேழை நாற்பது நாள் பெய்த மழையில் சிக்கினதால் ஞானஸ்நானத்தில் இன்று நாற்பது முழுக்கு போட வேண்டுமென்பது வாக்குவாதம். எகிப்திலிருந்து புறப்பட்ட ஆறு லட்சம் இஸ்ரவேலர் செங்கடற் தண்ணீரில் ஞானஸ்நானம் பெற்றார்கள் (கொரிந்யர் 10 : 15 இவர்கள் நாற்பது ஆண்டுகள் வரை வனாந்தரத்தில் நடந்ததால், ஞானஸ்நானத்தில் இன்று நாற்பது முழுக்கு போடவேண்டும் என்பதும் வாக்குவாதம். குஷ்டரோகியான நாகமான்யோர்தான் நதியில் ஏழு முழுக்குப் போட்டு குணப்பட்டான் ராஜாக்கள் 5 : 14 ஆகவே இன்று ஞானஸ்நானத்தில் ஏழு முழுக்கு போடவேண்டும் என்பதும் வாக்குவாதம். கிறிஸ்து தமது சீஷர்களுக்குப் பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தில் ஞானஸ்நானம் கொடுக்கக் கட்டளையிட்டார் மத்தேயு 28 19 ஆகவே பிதாவுக்கு ஒரு முழுக்கு குமாரனுக்கு ஒரு முழுக்கு பரி



...இன்னும் அநேக வார்த்தைகளாலும் சாட்சி கூறி (அவர்கள் சாட்சிகளாயிருந்தார்கள்). மாறுபாடுள்ள இந்தச் சந்ததியை விட்டுவிலகி (இயேசுவின் நாமத்தில் கொடுக்கப்படும் ஞானஸ்நானம் தவறு என்று கூறும் இன்றைய ஞானிகளையும் கல்விமான்களையும் விட்டுவிலகி) உங்களை இரட்சித்துக்கொள்ளுங்கள் என்றும் புத்தி சொன்னான் (இன்று புத்திமதியைக் கேட்கிறவன் யார்?).

'அவனுடைய வார்த்தையைச் சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டவர்கள் (இது தவறு அது சரி என்று தர்க்கம் பண்ணினவர்கள் அல்ல, சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டவர்கள்) ஞானஸ்நானம் பெற்றார்கள். அன்றைய தினம் ஏறக்குறைய மூவாயிரம் பேர் சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள்' (அப் 2:38-41).

66. பேதுரு தண்ணீரினால் கொடுக்கப்படும் ஞானஸ்நானத்தை கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தின்மேல் கட்டினான். இது பரலோகத்திலும் இவ்வண்ணமே கட்டப்பட்டிருக்கிறது என்பதற்கு மத்தேயு 16:19 சாட்சி! அன்று பேதுருவில் இருந்த பரிசுத்த ஆவி இன்று எந்த ஊழியனில் இருக்கிறதோ அவன் பேதுரு 3000 பேருக்கு கொடுத்த ஞானஸ்நானத்தையே கொடுப்பான்.

67. சிலோன் பெந்தெகோஸ்தே சபை ஸ்தாபனத்தார் வெளியிட்டிருக்கும் ஒரு ஞானஸ்நானக் கைப்பிரதியிலே, 'பேதுரு இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள்' என்று கூறினபோது அவனுடைய மனதில் இருந்தது என்ன? என்று கேட்டுவிட்டு இயேசுவின் நாமத்தின்மேல் இடறி விழுகிறார்கள். பேதுருவின் வாய் வழியாய் பேசினவர் பரிசுத்த ஆவியானவரே. மனத்தில் ஒன்றையும் உதடுகளில் வேறொன்றையும் வைத்து பேச அவர் மனிதன் அல்லவே! மனத்தில் நினைத்ததையே அவர் உதடுகளினால் பேசினார். 'முள்ளில் உதைக்கிறது உனக்கு கடினமாம்!' (அப் 9 : 5).

68. மனிதர் என்னதான் வெண் உடை அணிந்தாலும், வீடு வாசல் சொத்து சுதந்திரத்தை விட்டு வந்து அல்லேலூயா என்று ஆர்ப்பரித்து அந்நிய பாஷைகளில் பேசினாலும், வார்த்தையைக் கண்டுகொள்ளாமல் அதை எதிர்க்கும் ஆவி பரிசுத்த ஆவியாகாது!

69. ரோமன் கத்தோலிக்கச் சபை ஸ்தாபனத்தார், 'எங்கள் சபையின் முதல் போப் ஆண்டவன் பேதுரு (ராயப்பர்)' என்கிறார்கள். இதுபொய்! அவர்கள் கூறுவது உண்மையானால், இன்று அவர்கள் பேதுரு கொடுத்த ஞானஸ்நானத்தையே கொடுப்பார்கள் அல்லவா?

போராடுவது கல்லின்மேல் உதைப்பதற்குச் சமம்! இந்தக் கல்லைக்குறித்து இயேசுவே கூறுவதை சற்று கவனியுங்கள்!

'இந்தக் கல்லின்மேல் விழுகிறவன் நொறுங்கிப் போவான்; இது எவன்மேல் விழுமோ அவனை நசுக்கிப் போடும் என்று நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்' என்றார் (மத்தேயு 21:44).

# இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் ஞானஸ்நானங் கொடுத்த மூன்று சாட்சிகள்

## பேதுரு முதல் சாட்சி:

**63.** இயேசு பரலோகத்தின் திறவுகோல்களை (தண்ணீரினாலும் ஆவியினாலும் பிறந்து பரலோக ராஜ்யத்தில் பிரவேசிக்கச் செய்யும் போதனையை) மூத்த அப்போஸ்தலனான பேதுருவிடம் கொடுத்து, 'பூலோகத்திலே நீ கட்டுகிறது எதுவோ அது பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும், பூலோகத்திலே நீ கட்டவிழ்ப்பது எதுவோ அது பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும்' என்றார் (மத்தேயு 16:19).

**64.** பேதுரு பெந்தெகோஸ்தே என்னும் நாளில் பரிசுத்த ஆவியின் வல்லமையினாலும் வெளிப்பாட்டினாலும் அந்த வெளிப்பட்ட நாமத்தை ஞானஸ்நானத்துக்கென்று குறித்து உபதேசித்து சுமார் 3000 பேருக்கு ஞானஸ்நானம் கொடுக்கிறான்.

**65.** '...நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று (மனந்திரும்புதலும் பாவமன்னிப்பும் யாருடைய நாமத்தில் பிரசங்கிக்கப்படுகிறது என்பதை கண்டுகொள்ளுங்கள்). இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள் அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள். வாக்குத்தத்தமானது (இது அன்றைய யூதருக்கு மாத்திரமா அல்லது இன்றைக்கும் உரியதா என்று காண்க!) உங்களுக்கும் உங்கள் பிள்ளைகளுக்கும், நம்முடைய தேவனாகிய கர்த்தர் வரவழைக்கும் தூரத்திலுள்ள யாவருக்கும் உண்டாயிருக்கிறது என்று சொல்லி (அப்போது சுமார் 2000 ஆண்டுகள் தூரம் இருந்த நமக்கு உரியது என்று சொல்லி).



சுத்தஆவியானவருக்கு ஒரு முழுக்கு என்று மூன்று முழுக்கு போடவேண்டும்என்பதும் வாக்குவாதம்.

**53.** தண்ணீரினால் பிறக்கவேண்டும் என்பது ஒரு பிறப்பை குறிக்கிறது. தண்ணீரில் மூன்று தடவை மூழ்கி வெளியே வருவது மூன்று பிறப்புகளையல்லவா குறிக்கிறது. கிறிஸ்து ஒரே தடவை மரித்து உயிர்த்தெழுந்தார். நாமும் நம்மை கிறிஸ்துவின் மரணத்துக்குள்ளாக்கும் ஞானஸ்நானத்திலே அவரோடே அடக்கம் பண்ணப்படுகிறோம். அவர் உயிர்த்தெழுந்ததுபோல நாமும் உயிர்த்தெழுவோம் என்ற முழு நிச்சயத்துடன் தண்ணீரை விட்டு வெளியேறுகிறோம் (ரோமர் 6:3-8). ஆவியாயிருக்கும் பிதாவும் (யோவான் 4:24) பரிசுத்த ஆவியானவரும் மரித்து அடக்கம் பண்ணப்பட்டு இருந்தால் அவர்களுக்காகவும் இரண்டு முழுக்கு போடுவதில் நஷ்டம் ஒன்றுமில்லை. ஆனால் அவர்கள் மரிக்கவில்லை! பிதாவானவர் நமக்காக குமாரனை பலிகொடுத்தார் என்பது தான் சுவிசேஷம்! மனந்திரும்ப மனமுண்டானால் இயேசு சபைப்-பாரம்பரியக் கட்டுகளை உடைத்து விசுவாசிக்கிறவர்களுக்கு விடுதலை அளிக்கிறார்! சபையின் ஊழியரே, உங்கள் சபைகளை வார்த்தைக்குக் கொண்டு வருவீர்களானால் பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும்!

**54.** முகங்குப்புற மூழ்க வேண்டுமா அல்லது முதுகு பக்கம் மூழ்க வேண்டுமா! மூழ்குவதில் நாம் செய்கிறது என்ன! இயேசுவோடே கூட அடக்கம் பண்ணப்படுகிறோம் அல்லவா?மரித்தோரை அடக்கம் பண்ணுகையில் முகம் மேல்பக்கம் இருக்கவேண்டும் என்பதை நமக்கு சுபாவமே போதிக்கிறதில்லையா? கேட்டால், 'மூழ்குகிறஎவனும் வானத்தை அண்ணாந்து பார்ப்பதில்லை' என்று கேலியாகக் கூறுகிறார்கள். நாம் ஞானஸ்நானத்தில் அடக்கம் பண்ணப்படுகிறோம் என்பது ஞானிகளுக்கும் கல்விமான்களுக்கும் விளங்காமற்போனது ஏனோ?

**55.** இப்பொழுது நாம் அராய்ந்து விளங்கிக் கொண்டதை சற்று ஞாபகப்படுத்திக்கொள்வோம். குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுப்பதும், ஞானஸ்நானத்தில் தண்ணீரைத் தலைமேல் தெளிப்பதும், அல்லது ஒரு வாளித் தண்ணீரைத் தலைமேல் ஊற்றுவதும், மூன்று முறை மூழ்கி ஞானஸ்நானம் எடுப்பதும், முகங்குப்புற மூழ்கி ஞானஸ்நானம் எடுப்பதும் ரோமன் கத்தோலிக்க புளித்தமாவும் பெத்தேகோஸ்தே சபையின் குருட்டாட்டமும் என்பது நமக்கு புலனானது. புளித்தமாவுக்கு எச்சரிக்கையாயிருங்கள் என்று இயேசு கூறினது உங்களுக்கு ஞாபகமிருக்கிறதா? (மத்தேயு 16:6 11-12). ஜாக்கிரதையாயிருந்து மனந்திரும்புங்கள். தேவனுடைய ராஜ்யம் சமீபமாயிருக்கிறது!

56. அப்படியானால் யாருக்கு ஞானஸ்நானம் கொடுக்க வேண்டும்? மனந்திரும்பி தேவனுடைய ராஜ்யத்தின் சுவிசேஷத்தை விசுவாசிக்கிறவர்களிக்கு மாத்திரமே ஞானஸ்நானம் கொடுக்க வேண்டும்? எந்த ஞானஸ்நானம் கொடுக்க வேண்டும்? முழுக்கு ஞானஸ்நானம் கொடுக்கவேண்டும்! எப்படி மூழ்க வைக்க வேண்டும்? ஒரு மனிதனை அடக்கம் செய்வதைப்போலவே முகம் மேல் பக்கமும் முதுகு கீழ்பக்கமுமாக மூழ்க வைக்க வேண்டும்!

## ஞானஸ்நானம் எந்த நாமத்தில் கொடுக்கப்பட வேண்டும்?

('ஞானமுள்ளவன் உம்முடைய நாமத்தை மதிப்பான்' மீகா 6:9)

57. இன்று ரோமன் கத்தோலிக்க சபை தொட்டு பெந்தெகோஸ்தே சபைவரை 'நான் உனக்கு பிதா, குமாரன் பரிசுத்தஆவியின், நாமத்தினால் ஞானஸ்நானம் கொடுசகிறேன் என்று சொல்லித்தான் ஞானஸ்நானம் கொடுக்கின்றன.

58. ஆனால் இவ்வண்ணம ஞானஸ்நானம் கொடுத்த சிஷனும் பெற்றுக்கொண்ட விசுவாசியும் நாம் வாசிக்கும் வேதாகமத்தில் இல்லை! நம்ப முடியவில்லை அல்லவா? இருக்குமானால் எனக்கு வேத வசனத்தைக் குறித்து எழுதுங்கள். இல்லையானால் சத்தியத்தை ஏற்றுக்கொள்ளுங்கள்! மனந்திரும்புதலும் பாவமன்னிப்பும் எருசலேம் தொடங்கிச் சகல தேசத்தாருக்கும் பிரசங்கிக்கக் கொடுக்கப்பட்ட ஒரு நாமம் உண்டு. ஆனால் இன்றைய சபைகள் கொடுக்கும் ஞானஸ்நானத்தில் அந்த நாமம் இல்லை! அந்த நாமம் எது?

> 'அப்பொழுது வேதவாக்கியங்களை அறிந்து கொள்ளும்படி அவர்களுடைய மனதை அவர் திறந்து அவர்களை நோக்தி: எழுதியிருக்கிற'படி கிறிஸ்து பாடுபடவும், மூன்றாம் நாளில் மரித்தோரிலிருந்தெழுந்திருக்கவும் வேண்டியதாயிருந்தது; 'கவனி! அன்றியும் மனந்திரும்புதலும் பாவமன்னிப்பும் எருசலேம் தொடங்கிச் சகல தேசத்தாருக்கும் அவருடைய நாமத்தினாலே பிரசங்கிக்கப்படவும் வேண்டியது நீங்கள் இவைகளுக்குச் சாட்சிகளாயிருக்கிறீர்கள்'

> 'என் பிதாவாக்குத்தத்தம் பண்ணிணதை நாம் காண்கிறோம். இதோ, நான் உங்களுக்கு அனுப்புகிறேன். நீங்களோ உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும் வரைக்கும் எருசலேம் நகரத்தில் இருங்கள் என்றார்' (லூக்-24:45-49)



59. இந்த வசனங்களில் நான்கு காரியங்களை நாம் காண்கிறோம்: (1) அவர்களுடைய மனதை அவர் திறந்தார். (2) அப்பொழுது அவர்கள் மனந்திரும்புதலுக்கும் பாவமன்னிப்புக்கும் எருசலேம் தொடங்கிச் சகல தேசத்தாருக்கும் பிரசங்கிக்கப்பட கொடுக்கப்பட்ட நாமத்தை கண்டு கொண்டார்கள். (3) அந்த வெளிப்பாட்டுக்கு அவர்கள் சாட்சியானார்கள். (4) பரிசுத்த ஆவிக்காக அவர்கள் எருசலேம் பட்டணத்தில் காத்துக் கொண்டிருந்தார்கள்.

60. அப்பொழுது பெந்தெகோஸ்தே என்னும் பண்டிகையன்று அவர்கள் மேல் பரிசுத்தஆவி இறங்கிவர, அவர்கள் உன்னத பெலனால் தரிப்பிக்கப்பட்டார்கள். அப்போது அவர்கள் சாட்சிகளானார்கள், அந்த வெளிப்பட்ட நாமத்துக்காக அவர்கள் காவலில் வைக்கப்பட்டார்கள்; அடிக்கப்பட்டார்கள், அவமானப்படுத்தப்பட்டார்கள், நாடுகடத்தப்பட்டார்கள், கொலை செய்யப்பட்டார்கள். ஆனால் அவர்கள் அந்த ஒரு நாமத்துக்காக ரத்த சாட்சிகளானார்கள்! இதை அப்போஸ்தலருடைய நடபடிகளில் இந்நாள் வரைக்கும் வாசித்து வருகிறோம்.

61. மனந்திரும்புதலுக்கும் பாவமன்னிப்புக்குமென்று வெளிப்பட்ட நாமம் எது? உண்மையான ஒரே முழுக்கு ஞானஸ்நானம் எது? அந்த நாமம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து என்ற நாமமே! அப்போஸ்தலர்கள் (இயேசு கிறிஸ்துவின் சீஷர்கள்) கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அளித்த ஞானஸ்நானமே உண்மையான ஞானஸ்நானம்! இது ஞானிகளும் கல்விமான்களும் ஞானஸ்நானத்தில் ஏற்றுக்கொள்ளாத நாமம். ஏற்றுக் கொள்ளும் உள்ளம் வாய்ந்த பாலகருக்கு வெளிப்பட்டிருக்கும் நாமம்! இந்த நாமத்திலே ஞானஸ்நானம் கொடுத்தவர்களும் பெற்றவர்களும் அப்போஸ்தலருடைய நடபடிகளிலும் பவுல் எழுதின நிருபங்களிலும் காணப்படுகிறார்கள். ஆனால் 'பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின், நாமத்தினால் ஞானஸ்நானம் கொடுக்கிறேன்' என்று கூறி ஞானஸ்நானம் கொடுத்தவர்களும் பெற்றவர்களும் வேதாகமத்தில் இல்லை: ஒரே ஒரு சான்று கூட இல்லை!

62. இரண்டு மூன்று சாட்சிகளுடைய வாக்கினாலே சங்கதிகளெல்லாம் நிலைவரப்படும் என்று வேதாகமம் கூறுகிறது (மத்தேயு 18:16) கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அளிக்கும் ஞானஸ்நானத்துக்கு மூன்று பிரதான சாட்சிகளைக் குறிப்பிடுகிறேன். இன்றைய பட்டம் பெற்ற ஞானிகளும் கல்விமான்களும் அளிக்கும் ஞானஸ்நானத்துக்கு சாட்சிகள் இருந்தால் குறிப்பிட்டு காட்டுங்கள். இயேசுவின் நாமத்துக்கு எதிர்த்துப்